

சஸ்பென்ஸ்
ரூ.10/
பட்டுக்கோட்டை
பிரபாகர்






# 1



"சீக்கிரம் சுதா முதலாளி நானே ஆபிசுக்கு லேட்டாப் போனா எல்லாருக்கும் இடம் கொடுத்துடும்"

தன் டை முடிச்சை கண்ணாடி பார்த்து சரி செய்த விட்டு படுக்கையறையை விட்டு வெளியே வந்தான் கையில் பிரீஃப்கேசுடன் சுதந்திரா.

"ஒன் மினிட் பொறுத்துக்குங்க. உருளைக்கிழங்கு மசியல் பண்ணிருக்கேன். அதில் தாளிக்கலைன்னா டேஸ்ட்டே நல்லா இருக்காது"

சமையலறையில் காரியம் பார்த்துக் கொண்டே குரல் கொடுத்தாள் சுதா.

சுதந்திரா ஹாலில் அமர்ந்து ஷூ அணிந்து கொண்டான். நியூஸ் பேப்பரை எடுத்து காலையில் மேலோட்டமாகப் பார்த்து விட்டு, விரிவாகப் படிக்க வேண்டும் என்று நினைத்து வைத்திருந்த செய்தியை படிக்கத் துவங்கினான்.

வால் க்ளாக் டய்ங் என்று ஒலித்து மணி ஒன்பதரை என்று அறிவித்ததும், "சுதா, உனக்கு இன்னும் லேட்டாகுமின்னா இன்னைக்கு ஒருநாள் நான் பக்கத்தில் ஹோட்டல்ல சாப்பிட்டுக்கறேனேம்மா. கோபமாச் சொல்லலை எனக்கு 'ரொம்ப' நேரமாச்சு. பத்தே காலாயிடும் போய்ச் சேர, நிறைய பேங்க் வேலைகள் இருக்கும்மா" என்றான் சுதந்திரா.

"இதோ வந்துக்கிட்டே இருக்கேன். ஆச்சு. கேரியர்ல எடுத்து வச்சிக்கிட்டு இருக்கேன். நம்ம ஏரியாவிலேயே ஆபீஸ் ஆரம்பிச்சிருக்கக்கூடாதா ங்க?" குரல் மட்டும் வந்ததேயொழிய ஆளைக் காணோம்.

"அது சரி நம்ம ஏரியாவுக்கு தேடி வருவானா குத்தன்? இதப் பாரு பத்து எண்ணறதுக்குள்ளே

வந்துட்டா சரி, இல்லைன்னா நா போய்க்கிட்டே இருப்பேன். அப்புறம் கோவிச்சுக்காதே."

சுதந்திரா எழுந்து பேப்பரை மடக்கிப் போட்டுவிட்டுத் தன் பிரீஃப்கேசை எடுத்துக் கொண்டு நகர.....

பிளாஸ்டிக் கூடையில் டிபன் கேரியர், இலை எல்லாம் வைத்து எடுத்துக் கொண்டு வந்து விட்டாள் சுதா.

வாங்கிக் கொண்டு, "காலைல இன்னும் கொஞ்சம் முன்ன எந்திரிச்சா இவ்வளவு பரபரப்பு வேண்டியிருக்காதில்ல?" என்றான்.

"சொல்வீங்களே... காலைல அஞ்சு மணிக்கு எந்திருக்கணும். ராத்திரி பத்து பத்தரைக்காவது தூங்கப் போயிடணும். எங்க தூங்க விடறீங்க நீங்க? நேத்து நாம தூங்கினப்போ மணி ஒண்ணே கால் தெரியுமா?" என்றாள் லேசான வெட்கத்துடன்.

"அவ்வளவு நேரம் ஆயிடுச்சா. சரி. இனிமே நேரத்தோட ஆரம்பிச்சிடலாம்"

"ச்சீ." என்றாள். "ஆமா இப்ப நம்ம ஏரியாவுல அப்ளை பண்ணா ஒரு மாசத்தில டெலிபோன் கிடைக்குதாம் தெரியுமா,"

"ஆமாம். அதுக்கென்ன?"

"நம்ம வீட்டுக்கு ஒண்ணு வெச்சுக்கக் கூடாதா?"

"அது சரி ஆபீஸ் போனுக்கே பில் எவ்வளவு தெரியுமா, மூவாயிரம் வருது. இன்னும் நிறைய சம்பாரிக்கலாம் சுதா. அதான் பக்கத்து வீட்டு போன்ல உன்னைக் கூப்பிட்டுப் பேசிட்டிருக்கேனே அடிக்கடி."

"ஆரம்பத்தில் அந்த வீட்டு மாமி அலுத்துக்கலை. இப்பல்லாம் போன் வந்தா என்னைக் கூப்பிடறதுக்கு ரொம்ப சலிச்சுக்கறாங்க."

"யாருக்கும் உள்ள இயல்புதானே? நீ தான் சிரிச்சுப் பேசி தாஜா பண்ணிக்கணும். கடையிலேர்ந்து ஊறுகா பாட்டில் வாங்கு. ஊறுகாயை வேற சாதாரண பாட்டில்ல



மாத்திக்கோ. கொண்டு போய் நானே போட்டேன் மாமி. உங்களுக்கு சேர்த்துப் போட்டேன். வெச்சுக்கங்கன்னு சொல்லு. குளிர்ந்து போயிடுவாங்க."

"ச்சே! என்ன ஒரு கிரிமினல் ஐடியா! வர்றப்ப வாங்கிட்டு வந்துடுங்க"

"என்ன?"

"ஊறுகாதான்."

"அதுவும் நான் தான் வாங்கிட்டு வரணுமா?"

"எத்தனை மணியாகும் வர்றதுக்கு?"

"இன்னைக்கு உள்ள வேலையைப் பொறுத்தது. எப்படியும் எட்டு, எட்டரைக்கு வந்துடறேன். வா, வாசல் கதவை மூடிக்கோ சுதா" என்ற சுதந்திரா திடீரென்று அவள் எதிர்பாராத் தருணத்தில் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

"அய்யோ! என்னங்க இது! வாசல் கதவு திறந்திருக்கு" சிணுங்கினாள். ஆனால் உள்ளுக்குள் விரும்பினாள்.

சுதந்திரா வெளியில் வந்து சென்ற மாதம் செகண்ட் ஹாண்டில் வாங்கின மாருதியில் அமர்ந்தான். பிரீஃப்கேசையும், சாப்பாட்டு பேகையும் அருகில் வைத்துக் கொண்டு ஸ்டார்ட் செய்தான்.

சுதா டாட்டா காட்டிவிட்டு வீட்டுக்குள் வந்து கதவை மூடிக் கொண்டு படுக்கையறையில் ஃபேனைப் போட்டுக் கொண்டு கட்டிலில் மல்லாந்து பதினைந்து நிமிடங்கள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

அதன் பிறகு டிரெஸ்சிங் மேஜை முன்பு நின்று பின்னல் போட்டுக் கொண்டு, பவுடர் பூசி, பொட்டு வைத்துக் கொண்டாள்.

மணி பத்தரை தான் ஆகியிருந்தது. காலை டிபன் வேலை முடிந்தது. மதிய சமையல் சமைத்து முடித்து அவரை அனுப்பிவைத்தாயிற்று. இனிமேல் பெரிதாக வேலைகள் இல்லை.

கொஞ்சம் பாத்திரங்களைக் கழுவி கவிழ்த்து வைத்து விட்டு வாஷிங் மிஷினில் துணிகளை துவைத்து 'மொட்டை மாடியில் காய வைத்து விட்டு வந்து விட்டால் அப்புறம் மாலை வரை தூங்கலாம். புத்தகம் படிக்கலாம். வீடியோவில் படம் பார்க்கலாம். பக்கத்து வீட்டிற்குச்சென்று அரட்டையடிக்கலாம்.

நிறைய நேரம் வேஸ்ட்டாகப் போகிறது. அவரிடம் கேட்க வேண்டும். "நானும் ஆபீசுக்கு வரட்டுமா? அங்கே வந்து ஏதாவது வேலைகள் செய்யட்டுமா? ப்ளஸ் டூ அறிவுக்குத் தகுந்த மாதிரி நம் ஆபீசில் இருக்கும் எந்த வேலையும் செய்கிறேனே? சம்பளச்செலவும் குறையும். எனக்கும் பொழுது போகும் எப்போதும் உங்களோடே இருக்கலாம் என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்க வேண்டும்.

என்ன சொல்வார்? சரியென்றுதான் சொல்வார். ஆனால்....

இங்கே வீட்டில் யாருமே இல்லாமல் பூட்டிக் கொண்டு இரண்டு பேருமே புறப்பட்டுப் போய்விட்டால் எப்படி?' வீட்டில் ஒரு ஆள் இருந்தால்தானேப் பரவாயில்லை. இரண்டு பேரும் வேலைக்குப் போய்விட்டு வந்தால் வீட்டில் சில்லறை வேலைகள் தேங்குமோ?

வேண்டுமானால் கேட்டுப் பார்க்கலாம்.

"நான் வீட்டில் செய்ய முடிகிற வேலைகள் ஏதாவது இருந்தால் ஆபீசில் இருந்து கொண்டு வந்து கொடுங்கள் செய்கிறேன்"

இது சாத்தியமான விஷயமாகப் படுகிறது.

சுதா துணி துவைத்துக் காயப் போட்டுவிட்டு வந்து மேஜை முன் அமர்ந்தாள். பள்ளியில் கூடப் படித்து கல்யாணமாகி மதுராந்தகம் சென்று விட்ட தோழி பத்மாவுக்குக் கடிதம் எழுதி எத்தனை நாட்களோ ஆயிற்று.

அவளுக்கு நான் சென்னையில் இருப்பது கூடத் தெரியாது.



சுதா வெள்ளைக் காகிதம் எடுத்து கடிதம் எழுதத் துவங்கினாள்.

'அன்புள்ள பத்மாவுக்கு உன் தோழி சுதா எழுதியது. நீ எப்படி இருக்கிறாய்? நான் ரொம்ப நன்றாய் இருக்கிறேன்.

உனக்குத் தெரியுமா? நான் இப்போது சென்னையில் தான் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறேன். சைதாப்பேட்டையில் காமராஜர் தெருவில், விலாசம் கவரில் எழுதியுள்ளேன்.

என் கணவர் நான்கு வருட ஒப்பந்த அடிப்படையில் மலேஷிய சென்றிருந்தது, உனக்குத் தெரியும். அப்போது நான் என் அம்மா வீட்டில் இருந்தேன்.

அவர் மலேஷியாவில் இருந்து திரும்பி [illegible] வருடமாகிவிட்டது. அவர் சம்பாதி[illegible] வைத்து சென்னையில் பாரீஸ் [illegible] டிராவல் ஏஜென்சி' என்கிற பெயரில் [illegible] துவங்கி நடத்தி வருகிறார்.

வெளிநாடு[illegible] வேலை விஷயமாக அல்லது சுற்றுலா[illegible]களுக்கு விசா மற்றும் சகல ஏற்[illegible]களையும் செய்துத் தரும் தொழில், பாஸ்போர்ட் எடுத்துக் கொடுப்பார்கள். தற்சமயம் எங்கள் ஆபீசில் எட்டு பேர் வேலை பார்க்கிறார்கள். சீரான வருமானம் இருக்கிறது.

சென்ற மாதம் நாங்கள் கார் வாங்கினோம் மாருதி. பழைய கார் தான். வீட்டில் எல்லா சௌகரியமும் செய்து கொடுத்திருக்கிறார் சிங்கரண்டர், ரெப்ரிஜிரேட்டர், டிவி, சிடி ப்ளேயர், [illegible] என்று மலேஷியாவில் திரும்பும் போது எல்லாம் வெளிநாட்டுப் பொருள்களாக வாங்கி வந்து விட்டார்.

அவர் ஆபீஸ் போய்விட்டால் எனக்கு ஒரே போர். மற்றபடி ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். ஞாயிற்றுக்கிழமை எங்கள் ஆபீசுக்கு விடுமுறை. அன்றைக்கு அவர் என்னை எங்காவது அழைத்து சென்று விடுவார். என்று முழுக்க வீட்டில் அடுப்பு பற்ற வைப்பதில்லை. ஹோட்டல், சினிமா என்று சுற்றுவோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை நாளும் அவரும் உன்னைப் பார்ப்பதற்காக மதுராந்தகம் வருகிறோம். அவரைக் கேட்டுவிட்டு எந்த ஞாயிற்றுக்கிழமை என்று முன் கூட்டியே தபால் எழுதி விடுகிறேன். நீ சென்னை வந்தால் கண்டிப்பாக வீட்டிற்கு வர வேண்டும்.

சும்மா வந்துப் பார்த்து விட்டு அரைமணியில் புறப்படும் மாதிரி வராதே. வந்தால் இரண்டு நாட்களாவது தங்கி ஓய்வாக இருந்து விட்டுப் போகும் தோதில் வா. எவ்வளவு நாட்களாயிற்று நாம் இருவரும் மணிக்கணக்காய் உட்கார்ந்து பேசி.

உன் குழந்தைகள் நன்றாய் இருக்கிறார்களா? விஜியை ஸ்கூலில் சேர்த்து விட்டாயா? எனக்கு நான்கு மாதம் முன்பாக ஒரு தடவை அபார்ஷனாகி விட்டது. எப்போது குழந்தை வரும் என்று என் விதி இருக்கிறதோ, அப்போதுதானே கிடைக்கும்.

என் தங்கை மாலினி தெரியுமில்லையா உனக்கு. அவளும் சென்னையில் தான் இருக்கிறாள். எத்திராஜ் கல்லூரியில் பி.எஸ்.சி இரண்டாம் வருடம் படிக்கிறாள். அங்கேயே ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறாள். என்னோடு இருந்து படி என்றால் கேட்கவில்லை. ஹாஸ்டல் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமாம். வாராவாரம் இங்கே வீட்டுக்கு வந்து விட்டுப் போவாள்.

அடுத்த வருடம் அவள் படிப்பு முடிந்ததுமே கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று அம்மா சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவள் மேலே படிக்க வேண்டும் என்கிறாள்.

வேறு என்ன செய்திகள்? உன் வீட்டில் போன் இருக்கிறதா? இங்கே எனக்குப் பக்கத்து வீட்டில் பார்வதி மாமி என்று இருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் போன் இருக்கிறது. நம்பர் கவரில் எழுதியுள்ளேன். நீ அந்த நம்பரில் அழைத்து என் பேர் சொன்னால், முகம் சுளிக்காமல் கூப்பிட்டு விடுவார்கள். பேசேன். உன் குரலைக் கேட்க வேண்டும் போலிருக்கிறது.

இவர் நாலு வருடம் வெளிநாட்டில் இருந்த போது எத்தனை தடவை போன் செய்வார் தெரியுமா உனக்கு?



சம்பாதித்துப் பணத்தில் கால் வாசி போன் செலவுக்கே ஒதுக்கியிருப்பார். என் மேல் அவ்வளவு பிரியம்.

அதே சமயம் சுயமாக உழைத்து முன்னேற வேண்டும் என்கிற துடிப்பும், ஆர்வமும் அதிகம். சதா முன்னேற்றத்தைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருப்பார். இன்னும் எழுதினால் என் கணவரைப் பற்றி நானே ரொம்ப தான் பீற்றிக் கொள்கிறேன் என்று நினைப்பாய்.

அவசியம் பதில் எழுது, பத்மா. உன் வீட்டில் எல்லோரையும் நான் ரொம்பவும் கேட்டதாகச் சொல்லு. உன் பதில் கடிதத்திற்காக நான் ஆவலோடு காத்திருப்பேன்.

இப்படிக்கு

சதா

எழுதி முடித்து விட்டு விரல்களில் நெட்டி முறித்தாள் சதா.

## 2



மதிய சாப்பாடு முடிந்ததும் லிப்டில் கீழிறங்கி வந்து பீடா போட்டுக் கொண்டான் சுதந்திரா. அதேக் கடையில் ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கினான். பிறகு சதாவுக்குப் பிடித்தமான பத்திரிகைகளை வாங்கிக் கொண்டான். மறுபடி நான்காவது மாடியிலிருக்கும் தன் அலுவலகத்திற்கு வந்தான்.

தனியறைக்கு வந்ததும் மணியடித்து பியூனை அழைத்து தனசேகரை வரச்சொன்னான். வந்த தனசேகரை, "உட்காருங்க தனசேகர்" என்றான்.

"பரவாயில்லை சார்." என்றான் அவன்.

"ஆபீஸ் விஷயமா உங்களை நான் வரச் சொல்லலை தனசேகர்"

தனசேகர் வேறெதற்கு என்பது போலப் பார்த்தான்.

"உக்காருங்க இன்னும் நான் உங்களுக்கு மரியாதை தர விரும்பறேன். நீங்க கேவலமா நடந்துகிட்டாலும் கூட" என்றான் சிகரெட்டைப் பார்த்தபடி.

"சார்!" தனசேகர் போலியாக அதிர்ந்த மாதிரி இருந்தது.

"நேத்து ஒரு ஃபைலை என் வீட்டிலிருந்து வாங்கிட்டு வரச் சொல்லி உங்களை அனுப்பிச்சேனே. அப்போ என் வைஃப்கிட்டே அவ்வளவு நாகரீகமா நீங்கப் பேசினதாத் தெரியலை தனசேகர்"

தனசேகரின் முகம் இருண்டது. ஆனாலும் பிரகாசமாக்க முயற்சி செய்தான்:

"சார், நீங்க என்ன சொல்றீங்க?"

"நீங்க அழகா இருக்கீங்கன்னு சொன்னதை நான் தப்பா எடுத்துக்கலை தனசேகர். அது ஒரு பாராட்டா இருக்கலாம். காலையிலேர்ந்து ராத்திரி வரைக்கும் வீட்ல சும்மா இருக்கிறதுக்கு போரடிக்காதா?ன்னு கேட்டதைக் கூட நான் தப்பா எடுத்துக்கலை தனசேகர். 'உங்க ஹஸ்பெண்ட் அடுத்த வாரம் பெங்களூரு போறார் ரெண்டு நாளைக்கு. அப்போ உங்களுக்குப் பேச்சுத் துணையா நான் வரட்டுமா?'ன்னு கேட்டதை எப்படி அர்த்தப்படுத்திக்கிறதுன்னு தான் எனக்குப் புரியலை தனசேகர்.

தனசேகர் தன் கர்சீப் எடுத்து முகத்தில் வியர்வை ஒற்றிக் கொண்டான்.

"சார், என்ன சார் இது! என்னைத் தப்பா நினைச்சிட்டாங்க போலிருக்கு. நான் சகஜமா சாதாரணமாத்தான் கேட்டேன். அவங்க ஏன் இப்படித் தப்பா நினைச்சாங்கன்னு எனக்குப் புரியலையே"

"ஸ்டாப் இட்! இன்னைக்கு உன்னை நேரா விசாரிக்கிறதுக்கு முன்னாடி நான் முதல்ல நம்ம பியூனைத்தான் கூப்பிட்டு விசாரிச்சேன். உன்னைப் பத்தி விசாரிச்சேன். நீ ஆபீஸ்ல என் வைஃப் பத்தி



ரொம்ப மட்டமாப் பேசியிருக்கே. பல தடவைப் பேசியிருக்கே. உண்டா, இல்லையா?"

"அய்யோ! என்ன கொடுமை இது? கூப்பிடுங்க அவனை என்ன சொன்னேனாம்?"

"சொல்லட்டுமா? நம்ம முதலாளியோட சம்சாரம் டக்கரா இருக்காடா, இவரு நாலு வருஷம் வெளிநாட்ல போய் இருந்தப்போ அவ பத்தினி தெய்வமா இவருக்காகவேக் காத்துக்கிட்டிருந்திருக்குமா என்ன? கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருந்திருக்கும். கொடுக்கற லுக்கைப் பார்த்தாலே ஒரு மாதிரியாத்தான் இருக்கு. என் கையைத் தொட்டு காபி கொடுத்தா தெரியுமா. ஒரு மாதிரியா சிரிச்சா. பாரேன். அவளைக் கவர் பண்ணிக் காமிக்கிறேன் பாரேன் என்று அவன் சொன்னதைச் சொல்லிக் காட்டியபடி எழுந்து அவனருகில் வந்த சுதந்திரா திடீரென்று ஆவேசமாகி அவன் முகத்தில் குத்தினான். "யூ...டர்ட்டி ராஸ்கல்!"

நாற்காலியிலிருந்து தடுமாறி கீழே விழுந்த தனசேகர் அவசரமாக எழுந்து கொள்ளும் முன்பாக அவன் மேல் பாய்ந்தான் சுதந்திரா.

அவனை எதிர்ப்புக் காட்டவே விடாமல், தடுக்க சந்தர்ப்பமே கொடுக்காமல் உதைத்து அடிக்க...அவன் கத்தின கதறலில்....

ஆபீஸில் இருந்த அத்தனை பேரும் அறைக்குள் ஓடி வந்துவிட்டார்கள். இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து இரண்டு பேரையும் பிரித்தார்கள்.

ஆவேசமடங்காமல் கத்தினான் சுதந்திரா, "விடுங்கய்யா என்னை! இந்த வெக்கங்கெட்ட நாயை கொலை பண்ணிடறேன்"

மூச்சு வாங்க தனசேகர் முறைத்தானே தவிர, தான் சொன்னதெல்லாம் உண்மையென்பதால் எதுவும் பதில் பேசவில்லை.

வயதில் பெரிய அக்கவுண்டண்ட் நல்லசாமி, "தம்பி என்ன இது. இப்படி சண்டை போடறது நல்லா இருக்கா? அவர் என்ன செஞ்சாரு?" என்றார்

சுதந்திராவிடம்.

"சார், என் பொண்டாட்டியைப் பத்தி ஆபீஸ்ல எல்லார் கிட்டேயும் கேவலமாப் பேசியிருக்கான். யாராச்சும் பொறுக்க முடியுமா? நேத்து என் வீட்ல என் வைஃப்கிட்டே இரண்டு அர்த்தத்தில் பேசியிருக்கான், தெரியுமா உங்களுக்கு. கூப்பிடுங்க போலீசை. இவனை அவங்கக்கிட்டேதான் ஒப்படைக்கணும்."

"தம்பி நிஜம்தான் என் காதுக்கும் செய்தி வந்துச்சு. நான் தனசேகரைக் கூப்பிட்டுக் கண்டிச்சேன். 'உன் வேலையைப் பாருப்பா தாத்தா'ன்னு எடுத்தெறிஞ்சிப் பேசிட்டான். கேவலமான விஷயத்தை எப்படி உங்கக்கிட்டேச் சொல்றதுன்னு தயங்கிட்டு இருந்தேன். போலீஸ் வேணாம். அவனை வேலையை விட்டு அனுப்பி வெச்சிடுங்க."

"போகச் சொல்லுங்க அவனை. இன்னொரு நிமிஷம் அவன் இந்த ஆபீஸ்ல நின்னுக்கிட்டிருந்தா நான் வெறியாயிடுவேன்" கத்தினான் சுதந்திரா.

தன்னை விடுவித்துக் கொண்ட தனசேகர் தன் சட்டைமேல் பட்டிருந்த தூசியைத் தட்டிக் கொண்டு எல்லோரையும் ஒரு முறைப்பான பார்வை பார்த்துக் கொண்டு வெளியேறினான்.

"எல்லோரும் அவங்க சீட்டுக்குப் போங்க"என்று அதட்டி எல்லோரையும் அனுப்பி வைத்த நல்லசாமி, நாற்காலியில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்த சுதந்திராவிடம் வந்தார்.

"தம்பி மரம்னு இருந்தா நல்ல பழமும் இருக்கும். அணில் கடிச்ச பழமும் இருக்கும். என்ன செய்யறது? உலகத்தில சில பேரு இந்த மாதிரி வக்கரம் பிடிச்சுத் திரியறாங்க. அதையே நினைச்சி டென்ஷன் பண்ணிக்காதீங்க. அவன் பார்வையும் அவனும்! இவ்வளவு நடந்தப்புறமும் மன்னிச்சுங்கன்னு ஒரு வார்த்தை சொன்னானைப் பார்த்தீங்களா? விடுங்க!"

ஆறுதல் சொல்லிவிட்டு நல்லசாமி போனதும் கர்சீப் எடுத்து தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு அலுவல்களில் ஆழ்ந்தான்.



"அப்புறம்?" என்றாள் சுதா இரவில் அவன் மடியில்.

"நான் என்ன கதையா சொல்றேன்? முறைச்சுக்கிட்டேப் போயிட்டான்" என்றான் சுதந்திரா அவள் கன்னத்தை வருடியபடி.

"மன்னிச்சிடச் சொல்லிக் கெஞ்சலையா?"

"இல்லை"

"திமிர்தானே? அசிங்கம் பிடிச்ச ஆளு. முதல் தடவை நம்ம ஆபீசுக்கு வந்து அவனைப் பார்த்தப்பவே அவன் சரியில்லைன்னு எனக்குப் பட்டுது"

"சரி விடு. ஒரு கெட்ட கனவா நினைச்சுக்கோ"

"எதுக்கு அடிச்சீங்க அவனை?"

"இதென்ன கேள்வி? முதல்ல கூப்பிட்டுப் பொறுமையாத்தான் விசாரிச்சிட்டு இருந்தேன். திடீர்னு ஆத்திரமாகி....பொண்டாட்டியைப் பத்தித் தப்பாப் பேசினவன்கிட்டே சமாதானமா எப்படிப் பேசறது?"

"அவன் பதிலுக்கு அடிச்சானா உங்களை?"

"அடிப்பாரா துரை. தப்பு செஞ்ச குறுகுறுப்பு இருக்குமில்லே ஆனா நல்லா முறைச்சான்"

"பயமா இருக்குங்க"

"என்ன பயம்?"

"கேப்பீங்களே. காலையிலேர்ந்து ராத்திரி எட்டு மணிக்கு நீங்க"வர்ற வரைக்கும் நான் மட்டும்தானே தனியா இருக்கேன்? உங்கக் கிட்ட அடியும் வாங்கிட்டு, வேலையையும் பறி கொடுத்துட்டு. அத்தனைப் பேர் முன்னாடி அவமானப்பட்டுப் போயிருக்கான் அவன்...."

"அதுக்காக..?"

"திடீர்னு வீட்டுக்குள்ளேப் புகுந்துட்டா என்ன செய்யறது?"

"என்ன சுதா இப்படி பயப்படறே? நியாயமா நான் அவனைப் போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்திருக்கணும். வேலையிலேர்ந்து எடுத்ததோட விட்டேன்னு அவன் சந்தோஷப்படணும்."

"அதை அவன் உணர்ந்தானான்னு நமக்கு எப்படித் தெரியும்?"

"இனிமே வாலாட்ட மாட்டான் சுதா. அப்படி உனக்கு பயமா இருந்தா ஒரு வாரத்துக்கு மிலினியைக் கூப்பிட்டு வீட்ல உனக்குத் துணையா இருக்கச் சொல்லேன்."

"நீங்க சொல்றதுக்கு முன்னாடியே நான் போன் பண்ணிக் கேட்டுட்டேன்"

"என்ன சொன்னா?"

"எக்ஸாம்ஸ் இருக்காம். இப்போ லீவு போட முடியாதாம்"

"உள்ளே நல்லாத் தாழ் போட்டுக்கோ. யாரும் வர மாட்டாங்க அநாவசியமா பயப்படாதே!"

"இருந்தாலும்...."

"பேசியே பயத்தை வேஸ்ட் பண்ணுவே. அப்புறம் ராத்திரி நேரத்தோட உன்னை நான்தான் தூங்க விடறதில்லைன்னு என் மேல பழியைப் போடுவே" என்ற சுதந்திரா அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

## 3



பார்வதிமாமி தன் வீட்டு வாசலுக்கு வந்து குரல் கொடுத்தாள், "சுதா, சுதா, உனக்கு போன்."

படித்துக் கொண்டிருந்த பத்திரிகையைத் தூக்கிப் போட்டுவிட்டு அவசரமாக புறப்பட்ட சுதா, 'யார் மாமி?' என்று கிட்டத்திட்ட ஓடி வந்தாள்.

"யாரோ தனசேகராம்" என்றாள் மாமி.

திக்கென்று தூக்கிப் போட்டது சுதாவிற்கு.

இவன் எதற்காக எனக்கு போன் செய்கிறான்,



இப்போது நான் பேச வேண்டுமா இல்லை பேசாமல் வைத்துவிட்டு போனை என்றுச் சொல்லிவிட்டு வைத்து விடலாமா?

என்னதான் சொல்கிறான் என்றுக் கேட்டால் என்ன? போனில்தானே பேசுகிறான்? என்ன செய்து விட முடியும்? கொஞ்சம் ஓவராகப் பேசினால் டொக் என்று போனை வைத்துவிட்டால் போகிறது.

சுதா ரிசீவரை சற்றே தயக்கத்துடன் எடுத்தாள்.

"ஹலோ" என்றாள் தன் குரலில் இருந்த மெலிதான நடுக்கத்தைத் தன்னாலேயே உணர முடிந்தது.

"ஹலோ நான் தனசேகர் பேசறேன்?"

"என்ன..என்ன வேணும் உங்களுக்கு?"

"நீ... நீ தான் வேணும்"

"என்னது?"

"ஏய்! சுதா! என்ன? பயந்துட்டியா? என் குரல் கூடத் தெரியலையா உனக்கு?" என்றான் எதிர்முனையில் சுதந்திரா.

"என்னங்க நீங்க. எதிலெல்லாம் விளையாடறதுன்னு இல்லையா?".

"சும்மா தமாஷுக்காக அவன் பேரைச் சொன்னேன். இப்படி கிடந்து நடுங்கறியே."

"நீங்க பொம்பளையாப் பொறந்து பாருங்க. அப்ப தெரியும்."

"சரி, அடுத்த ஜென்மத்தில் நான் சுதாவா பொறக்கறேன். நீ சுதந்திராவாப் பொறந்துடு, என்ன?"

"எதுக்கு போன் செய்தீங்க?"

"நான் இன்னிக்கு ராத்திரி வீட்டுக்கு வர மாட்டேன்"

"ஏன்?" பதறினாள்.

"எல்லாத்துக்கும் பதறணுமா நீ? பொறுமையாக் கேளு. திண்டிவனத்தில ஒரு பார்ட்டியைப் பார்க்க வேண்டியிருக்கு. கார்லதான் போறேன். ராத்திரில திரும்ப காரை ஓட்டிக்கிட்டு வர்றது ரிஸ்க். அதனால அவர் வீட்லயேத் தங்கிட்டு காலைல சீக்கிரம் புறப்பட்டு

வர்றேன். வீட்ல வந்து டிபன் சாப்பிட்டுட்டு அப்புறம் தான் ஆபீசுக்கு போவேன்."

"என்னங்க இது! இப்படித் தனியா விட்டுட்டுப் போறேன்னு சொல்றீங்களே..."

"என்னாச்சு உனக்கு? நாலு வருஷம் பொறுமையா இருந்தே. ஒரே ஒரு ராத்திரிக்கு இவ்வளவு பயப்படறியே"

"சரி... நான் பயப்படலை. மெதுவா வாங்க."

"வேறென்ன?"

"ஒண்ணும் இல்லை."

"கோபமா?"

"இல்லை. கொள்ளை கொள்ளையா சந்தோஷம்."

"மூடு இல்லை மகாராணிக்கு. வெச்சிடு."

போனை வைத்தாள் வெறுப்பாக சுதா.

"யாரும்மா போன்ல?" என்றாள் மாமி.

"அவருதான் பேசறார்" என்றாள் அலுப்பாக.

"தனசேகர்னு சொன்ன மாதிரி இருந்திச்சே."

"அம்மா விளையாட்டுப் பண்ணிருக்கார். நான் வர்றேன் மாமி" என்று புறப்பட்டு அவள் தன் வீட்டிற்குச் சென்றதும்.

சில நிமிடங்களில் மறுபடி போன் ஒலிக்க...

படுத்திருந்த மாமி கையூன்றி எழுந்து வந்து ரிசீவரை எடுத்து. "ஹலோ" என்றாள்.

"மாமியா? நான் சுதந்திரா பேசறேன். கொஞ்சம் சுதாவைக் கூப்பிடுங்க. ப்ளீஸ்."

"இத பாருங்க. சார். சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க. ஏதோ எப்பவாவது ஒரு தடவை கூப்பிட்டா பரவாயில்லை. சொந்த போன் மாதிரி அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு தடவைக் கூப்பிட்டா எப்படி?"

"அஞ்சு நிமிஷத்துக்கொரு தடவை நான் எப்போக் கூப்பிட்டேன் மாமி?"



"இப்ப கொஞ்சம் முன்னாடிப் பேசலையா? சொல்ல வேண்டியதை அப்பவே சொல்ல வேண்டியது தானே?"

"கொஞ்சம் முன்னாடி நான் கூப்பிடலையே மாமி. பதினைஞ்சு நிமிஷமா நான் உங்க நம்பரை ட்ரை பண்ணிட்டு இருக்கேன், எங்கேஜ்ட் சவுண்டு வந்துச்சு. இப்பதான் எனக்கு லைன் கிடைச்சது. மாமி. இனிமே உங்க போனை நான் தொந்தரவு பண்ணலை., வெச்சிடுங்க. தேங்ஸ்."

எதிர்முனை வைக்கப்பட்டதும் குழம்பி நின்றாள் மாமி.

என்ன இது? ஒரேப் புதிராய் இருக்கிறதே:

சற்று முன் தனசேகர் என்று பெயர் சொல்லி ஒருவன் அழைத்தான். நான் கூப்பிட்டு சுதா வந்துப் பேசினாள்.

அவள் பேசிவிட்டு யாரென்று கேட்டபோது, "அவர் தான். விளையாட்டு செய்தார்" என்றாளே.

அப்போது அது பொய்யா?

கணவனுக்குத் தெரியாமல் யாரோ ஒரு தனசேகருடன் கணவரிடம் பேசுவது போல என் முன்னால் பாவனை செய்து கொண்டு பேசிவிட்டுப் போயிருக்காளா?

கர்மமே! இந்தப் பெண்ணை ரொம்ப நல்லப் பெண் என்று நினைத்தேனே... தன் கணவனுக்குத் துரோகம் செய்கிறாளே...த்தூ!

நமக்கென்ன? இனி இவளோடு பேச்சும் வேண்டாம். நட்பும் வேண்டாம். அடுத்த தடவை எதற்காவது பல்லைக் காட்டிக் கொண்டு வந்து நின்றால், 'இனிமேல் வீட்டு வாசற்படியை மிதிக்காதே தாயே' என்றுக் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டியது தான்.

- - - - -

> "உன்னிடம் பாசம் வைக்கும் இதயத்தை தேடி. உன்னை கோபப்படுத்தும் இதயத்தை காயப்படுத்தாதே!
>
> — அன்னை தெரசா.

## 4



இரவு மணி பத்தரையைத் தாண்டியிருந்தது.

பார்கவி மாமி தன் வீட்டின் கூடத்தின் ஓரத்தில் ஜன்னல் அருகில் ஒற்றைக் கட்டிலில் படுத்து சீரான குறட்டை ஒலியுடன் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் மகன் மாடியறையில்.

ஒரு சத்தம் கேட்டு சட்டென்று எழுந்தாள் மாமி.

ஜன்னலுக்கு அந்தப் பக்கம் காம்பௌண்ட் மேல் வரிசையாக வைக்கப்பட்டிருந்த செடிகள் தாங்கிய மண் தொட்டிகளில் ஒன்று தான் கீழே விழுந்து உடைந்திருந்தது.

தொடர்ந்து சரசரவென்று சத்தம் கேட்க, ஒரு உருவம் அவசரமாக காம்பௌண்ட்டைத் தாண்டி அந்தப் பக்கம் குதிப்பதைப் பார்த்த மாமி உடனே, "யாரு? யாரது?" என்று கத்தினாள். பதிலில்லை.

மாமி உடனே அவசரமாக மாடியேறிப் போய் தன் மகனை எழுப்பினாள். "ஸ்ரீதரா, எந்திரிடா! யாரோ திருடனாட்டம் இருக்கு!" என்றாள் பதட்டமாக.

ஸ்ரீதரும் தூக்கம் கலைந்து எழுந்து கையில் டார்ச் எடுத்துக் கொண்டு, ஒரு கம்பும் எடுத்துக் கொண்டு நீ வீட்லயே இரும்மா என்று வெளியே வந்து சைடில் மாமி காட்டிய இடத்திற்கு வந்து இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் டார்ச் வெளிச்சத்தை அடித்துப் பார்த்து விட்டு திரும்பி வந்தான்.

"யாரையும் காணமேம்மா. நீ பார்த்தியா. இல்லை கனா கண்டியா?"

"தொட்டி கீழே விழுந்த சத்தத்தில தான் முழிச்சுக்கிட்டேன்."

"தொட்டி உடைஞ்சி கிடக்கிறது நிஜம்தான். ஒரு பூனை கூட அதைத் தட்டி விட்டிருக்கலாம். பேசாமப் படும்மா."

"இல்லைடா, என் கண்ணால பார்த்தேன். சுதா வீட்டுப் பக்கமா யாரோ குதிச்சான். நல்லாப் பார்த்தேன்."

"காணமே! நீ கத்தினியா?"

"யார்றா அதுன்னு கத்தினேன்."

"அதான் ஓடியிருப்பான். திருடனா இருக்கலாம். ஆள் முழிச்சாச்சுன்னு தெரிஞ்சதும் ஓடிருப்பான். விடு"

"இல்லைடா. எனக்கு இன்னொரு சந்தேகம் கூட இருக்கு."

"என்ன?"

"சுதா வீட்டு வாசல்ல சுதந்திரா சாரோட காரில்லை கவனிச்சியா?"

"அதுக்கென்ன?"

"அவர் ஊர்ல இல்லைடா. காலைல வருவாராம்."

"உனக்கெப்படித் தெரியும்?"

"சாயங்காலம் பூ வாங்க வந்தப்போ அவளும் வாங்க வந்தா. 'எங்க வீட்டுக்கு வர்றீங்களா. கேஸட்ல படம் போட்டுப் பார்க்கலாம்'னு கூப்பிட்டா. அவ பேச்சு சரியில்லை. நடவடிக்கையும் சரியாப் படலை. அதனால் நான் மூஞ்சி கொடுத்துப் பேசலை. 'உன் புருஷன் வர மாட்டானா?' ன்னு கேட்டேன். அவர் ஆபீஸ் வேலையா வெளியூர் போயிட்டு நாளைக்குக் காலைலதான் வருவார்'னு சொன்னா."

"அய்யோ! அதுக்கென்ன இப்போ? நீ என்ன சொல்ல வர்றே?"

"புருஷன் ஊர்ல இல்லை. நடு ராத்திரில ஒருத்தன் காம்பௌண்ட் சுவர் ஏறி அவ வீட்டுப் பக்கமா குதிக்கிறான். என்ன அர்த்தம்?"

"அம்மா! பாவம்மா! அநாவசியமா யார் மேலேயும்

பழி போடாம பேசாமத் தூங்கு"

ஸ்ரீதர் அதட்டிவிட்டு மாடிக்குப் போய்விட்டான்.

ஆனால் பார்கவி மாமிக்கு உறக்கம் வரவில்லை.

சுதா தப்பு செய்கிறாள்! போனில் பேசினானே ஒரு துடியன்! பேர் என்ன சொன்னான்? ஆ! தனசேகர்! இழைந்து இழைந்துப் பேசினானே! எவ்வளவு சாமர்த்தியமாக என்னிடம் பொய் சொன்னாள்?

உடனே அவள் புருஷன் பேசி சற்று முன் நான் பேசவே இல்லையே என்றுக் குட்டைப் போட்டு உடைத்து விட்டான்.

காம்பௌண்ட் சுவரேறி அவள் வீட்டுப் பக்கமாய் குதித்தவன் அந்த தனசேகர் தானோ?

எவ்வளவு பெரிய துரோகம் இது! இவள் நல்லாயிருப்பாளா. இவளை இவள் புருஷன் என்னமாகத் தாங்குகிறான். ஒவ்வொரு ஞாயிறும் ஜாலியாக வெளியே அழைத்துப் போகிறான். கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுக்கிறான், அவனுக்குப் போய் துரோகம் செய்கிறாளே சண்டாளி!

எனக்குத் தெரிந்த வரையில் நாளைக்கு இவள் புருஷனைத் தனியாக சந்தித்து சொல்லிவிட்டால் என்ன?

சொன்னால் என்ன ஆகும், வெட்டிப் போட்டு விடுவானோ? எந்த ஆம்பிளைக்கும் கோபம் வரத்தானே செய்யும்?

இல்லை, இவளை தனியாக அழைத்து அட்வைஸ் செய்யலாமா? இது சின்ன விஷயமா, அட்வைஸ் பண்ணி திருத்துவதற்கு?

பார்கவி மாமி யோசித்துக் குழம்பினாள்.

- - - - -



## 5



கோயிலுக்கு வெளியே ஓரமாகக் காரை நிறுத்தி இறங்கினான் சுதந்திரா. ஒரு அர்ச்சனை தட்டு வாங்கிக் கொண்டு, அந்தக் கடையிலேயே ஓரமாக செருப்புகளை விலக்கி விட்டு உள்ளே நுழைந்த போது மாலை மணி ஐந்தரை.

நேராகச் சென்று சாமி கும்பிட்டு அர்ச்சனை செய்து கொண்டு பிரகாரத்தில் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டான்.

தன் வாட்சைப் பார்த்துக் கொண்டு காத்திருந்தான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இதே நேரம் தப்பாமல் பார்கவி மாமி இந்தக் கோவிலுக்கு வந்து விடுவாள். இன்றைக்கும் நிச்சயம் வர வேண்டும்.

வந்தால் தான் அவன் சதுரங்க ஆட்டத்தில் அடுத்த காலை சாமர்த்தியமாக நகர்த்த முடியும்.

சுதந்திரா செய்யப் போகிற ஒரு காரியத்திற்கு ஒரு வகையில் பார்கவி மாமியை உடந்தையாக்கிக் கொண்டிருக்கிறான் படிப்படியாக.

முதல் கட்டமாக மாமிக்கு போனில் பேசி குழப்பியதன் மூலமாக சுதாவின் மேல் ஒரு சந்தேக விதையை விதைத்தாயிற்று.

தனசேகர் என்ற பெயரை மாமி மனதில் பதிய வைத்தாயிற்று. அடுத்து நள்ளிரவில் வேண்டுமென்றே ஜன்னலருகில் தொட்டி உடைத்து ஓசை ஏற்படுத்தி அவளின் தூக்கத்தைக் கலைத்து, காம்பௌண்ட் சுவரேறி குதித்ததில், அந்தச் சந்தேகம் வலுப்பெற்றிருக்க வேண்டும்.

இதற்காகவே சுதாவிடம் திண்டிவனம் போவதாகப் பொய் சொல்லி காரை தெருமுனையில் நிறுத்தி இறங்கி சுவரேறிக் குதித்து சந்தேகம் ஏற்படுத்திவிட்டு, மறுபடி

காரில் ஆபீஸ் வந்து ஆபீசிலேயே உறங்கி விட்டு, காலையில் புறப்பட்டு வீட்டுக்குப் போய் திண்டிவனத்தில் இருந்து திரும்பியவன் போல சுதாவிடம் பேசியாயிற்று.

ஆபீசில் தனசேகரை அத்தனை பேர் முன்னிலையில் உதைத்து, அடித்து வேலையில் இருந்து நிறுத்தி ஒரு பிரதாபம் தேடிக் கொண்டாயிற்று.

திட்டத்திற்குத் தோதாகக் கிடைத்தானே ஒரு தனசேகர்!

இப்போது திட்டத்தின் அடுத்த கட்டமாக...அதோ பார்கவி மாமி.

பார்கவி மாமி சாமி கும்பிட்டு விட்டு பிரகாரம் சுற்றி இவனைக் கடக்கிற சமயம், அப்போழுதுதான் பார்ப்பது போலப் பார்த்து, "அட! வாங்க மாமி. எப்படி இருக்கீங்க. கொஞ்சம் உக்காருங்க!" என்றான் சுதந்திரா.

பார்கவி மாமிக்கு அவனைப் பார்த்ததும் மீண்டும் மனதில் போராட்டம் துவங்கி விட்டது. தன் மனதில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தைச் சொல்வதா, வேண்டாமா?

மாமி அவனருகில் அமர்ந்து. "எப்படி இருக்கீங்க தம்பி?" என்றாள்.

"நல்லா இருக்கேன் மாமி. கூடிய சீக்கிரம் என் வீட்டுக்கு ஒரு போன் ஏற்பாடு செய்துடறேன்."

"அன்னைக்கு ஒரு அலுப்புல சொல்லிட்டேன் தம்பி. மனசுல வச்சிக்காதீங்க. மனுசாளுக்குள்ளே மனுஷாள் சின்னச் சின்ன உதவி கூட செய்துக்கலைன்னா எப்படி? நீங்க முந்தி மாதிரி தேவைப்படறப்போ எங்க நம்பரைக் கூப்பிடுங்க."

"ரொம்ப தேங்ஸ். அப்புறம்... ஒரு விஷயம் மாமி."

"என்ன சொல்லுங்க?"

சுதந்திரா ஏதோ ஒரு பெரிய ரகசியத்தைச் சொல்லத் தயங்குபவன் போல பாவனை செய்து விட்டு. "வந்து...கோயில்ல வெச்சிச் சொல்றேன். நீங்க சத்தியமா வெளில சொல்லிடாதீங்க. எனக்கு அம்மா இல்லை. உங்களை என் அம்மா ஸ்தானத்தில் வச்சி



என் மனசுல உள்ள ஒரு பாரத்தை இறக்கிக்கலாமா மாமி?" என்றான்.

"என்ன தம்பி என்னென்னமோ சொல்லிக்கிட்டு? என்ன விஷயம்? சொல்லுங்க" என்றாள் மாமி.

"மாமி, நான் சுதாவை கல்யாணம் செய்து ஒரு வருஷம்தான் அவளோட குடித்தனம் நடத்தினேன். அதுக்குள்ளே எனக்கு வெளிநாட்டுல வேலை கிடைச்சதால சம்பாரிக்கிற ஆர்வத்தில், அவளை அவங்கம்மா வீட்ல விட்டுட்டு நான் போயிட்டேன். ராத்திரி பகல் உழைச்சி சம்பாரிச்ச பணம் சேர்த்துக்கிட்டு ஊர் திரும்பினேன். இப்போ நல்ல விதமா ஒரு தொழில் ஆரம்பிச்சு நடத்திக்கிட்டிருக்கேன். சுதாவுக்கு என் மேல ஏதோ வருத்தம் இல்லைன்னா ஏமாற்றம் இருக்கலாம்னு நினைக்கிறேன்?"

"ஏன் தம்பி அப்படிச் சொல்றீங்க?"

"நல்லாதான் சிரிச்சுப் பழகறா. ஆனா அவக்கிட்டே ஏதோ ஒரு கள்ளத்தனம் தெரியுது. எதையோ என்கிட்டேயிருந்து மறைக்கிற மாதிரி நான் உணர்றேன். சொல்ல சங்கடமா இருக்கு. பச்சையா சொல்லணும்னா அவ எனக்குத் தெரியாம துரோகம் செய்யறாளோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு மாமி"

மாமி வாயடைத்து அமர்ந்திருந்தாள்.

"என்ன மாமி பேசாம இருக்கீங்க?"

"தம்பி, நானே ஒரு விஷயத்தை மனசுல போட்டு உருட்டிக்கிட்டிருந்தேன். அதே விஷயத்தைத்தான் நீங்க ஆரம்பிச்சிருக்கீங்க."

"என்ன சொல்றீங்க மாமி?"

"இதே சந்தேகம் எனக்கும் உண்டு தம்பி"

"எப்படிச் சொல்றீங்க?"

"அன்னைக்கு நீங்க போன் செஞ்சப்ப கடுப்படிச்சி வெச்சிட்டேனில்லை. அதுக்கு முன்னாடி வேற ஒருத்தன் போன் செஞ்சான். சுதா வந்து பேசிட்டு நீங்க பேசினதா சொல்லிட்டுப் போனா. உடனே நீங்க பேசி முதல்ல நீங்க கூப்பிடவே இல்லைன்னு

சொன்னீங்களா, எனக்கு ஒரே சந்தேகம். என்னா, போன்ல சிரிச்சு, குழைஞ்சு ரொம்ப உரிமையோடப் பேசினா சுதா"

"அய்யோ பேசினது யார் மாமி?"

"தனசேகர்ன்னு பெயர் சொன்னான்"

"தனசேகரா?" என்று இந்த இடத்தில் அதிர்ச்சி காட்டினான் சுதந்திரா.

"ஆமாம். அவனை உங்களுக்கு தெரியுமா?"

"தெரியுமாவா? அவன் ஒரு அயோக்யன். என் ஆபீஸ்ல வேலை பார்த்தான். நிறுத்திட்டேன் என்னா.." என்று சகல விவரங்களையும் சொன்னான்.

"அடப்பாவி தன்னோட ஃப்ரெண்ட்ஸ்கிட்ட சொன்ன மாதிரியே அந்த தனசேகர் சுதாவை வசியம் பண்ணிட்டான் போலிருக்கு. தம்பி. இதையும் கேளுங்க. நாலு நாளைக்கு முன்னாடி ஒரு நாள் நீங்க ஆபீஸ்ல வேலையா வெளியூர் போயிட்டு மறுநாள் தானே வந்தீங்க?"

"ஆமாம், திண்டிவனம் போயிருந்தேன்."

"அன்னைக்கு ராத்திரி..." என்று மாமி தான் பார்த்ததை விவாகச் சொல்லி, "நிச்சயமா அது அந்த தனசேகர் பயலாத்தான் இருக்கணும்" என்றாள்.

எதுவும் பேசாமல் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த சுதந்திரா. "என் மேல தப்பிருக்கு மாமி. புதுசா கல்யாணமான பொண்ணை நாலு வருஷம் தவிக்க வெச்சிட்டு பிரிஞ்சி போயிருக்கக் கூடாது. அதுக்குத்தான் இந்த மாதிரி பழி தீர்த்துக்கறா சுதா" என்றான்.

"நல்லா இருக்குதே! நீங்க குடும்பம் நல்லா முன்னேறணும்னு தானே எல்லோரையும் விட்டுட்டுத் தனியாய் போய் உழைச்சீங்க. அதே மாதிரி சம்பாரிச்சதால தானே இன்னிக்கு ஓரளவுக்கு வசதி பண்ணிக்க முடிஞ்சது? அதை எல்லாம் நினைச்சுப் பார்க்காம இப்படியா துரோகம் பண்ணுவா ஒரு குடும்பத்துப் பொண்ணு?"

"மாமி. நான் அவளோட மனசு விட்டுப் பேசப் போறேன். என்னோட ஒழுங்கா குடித்தனம் நடத்த



விருப்பம் இருந்தா இரு. இல்லைன்னா நாம சட்டப்படி பிரிஞ்சுடலாம்னு சொல்லப்போறேன்"

"அது சரிதான். வேற ஒரு ஆம்பளையா இருந்தா வெட்டிப் போட்டுட்டு ஜெயிலுக்குப் போயிருப்பான். நீங்க படிச்சவர். நல்ல பக்குவம் உள்ளவர். அதனால படபடப்படாத, நிதானமா யோசனை பண்ணிப் பேசறீங்க. நீங்க சொல்றதுதான் சரி தம்பி. பேசிப்பாருங்க. சரியா வரலைன்னு வைங்க, கழட்டி விட்டுடுங்க. மனசுல நிம்மதி இல்லாம எப்படி வாழ முடியும்?"

"மாமி, மறுபடி சொல்றேன். உங்களை என் அம்மா மாதிரி நினைச்சு எல்லாத்தையும் கொட்டிட்டேன். நீங்க தயவு செஞ்சு யார் கிட்டேயும் இதைப் பத்தி மூச்சு விட்டுடாதீங்க. சுதாவையும் கேட்டு வெச்சிடாதீங்க. அவகிட்டே எப்பவும் போல சகஜமாப் பழகுங்க. உங்களுக்கு ஏதாச்சும் தகவல் தெரிய வந்தா எனக்குத் சொல்லுங்க." என்றான் சுதந்திரா.

சம்மதித்துத் தலையசைத்தாள் பார்கவி மாமி.

## 6



இரவு சாப்பாடு முடிந்ததும் ஹாலில் அமர்ந்து கொஞ்ச நேரம் டி.வி. பார்த்தான் சுதந்திரா.

சுதா சமையலறையைச் சுத்தம் செய்து விட்டு பால் எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

பால் குடித்து விட்டு டி.வியை அணைத்து விட்டு வந்த சுதந்திரா, "சுதா, நம்ம ஆபீஸ்ல வேலை பார்க்கிறான் பாரு மாதவன், அவன் போன மாசம் என்னை செமத்தியா முட்டாளாக்கிட்டான். அதுவும் சொல்லி வச்சு, எதுக்கோ பேச்சு வந்திச்சி. நான் ரொம்ப உஷாரான ஆசாமி. என்னை யாரும் ஏமாத்த முடியாதுன்னு சொன்னேன். அதுக்கு அவன் திட்டம் போட்டு செயல்பட்டா யாரையும்

ஏமாத்திடலாம் சார்னு சொன்னான். என்கிட்டே நடக்காதுன்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"மறுநாள் என் மேஜையில் அவனோட ராஜினாமா கடிதம் இருந்துச்சு. நான் பதறிக்கிட்டு அவன் வீட்டுக்குப் போனேன். என்ன அவன் ஆபிஸ்ல நல்ல திறமையான ஆளு. அவனை மாதிரி இன்னொரு ஆளை தயார் படுத்த ரொம்ப நாளாகும். அதனால என்ன வருத்தமா இருந்தாலும் சமாதானப்படுத்தி மறுபடி அவனை வேலைல சேர்த்துடணுங்கிற நோக்கத்தில் அவன் வீட்டைத் தேடிப் போனேன்."

"என்ன சொன்னான்?"

"உங்களை முட்டாள்டிக்கவே முடியாதுன்னு சொன்னீங்களே. அதுக்காக அப்படி செஞ்சேன் சார். நான் ஏன் வேலையை ராஜினாமா செய்யப் போறேன்னு கேட்டு என்னை அசடு வழிய வெச்சுட்டான்."

"ச்சே! முதலாளி கிட்டே இப்படித்தான் மரியாதை இல்லாமல் நடந்துக்குவாங்களா?"

"அவனை எப்பவும் நான் ஒரு ஃபிரண்டு மாதிரி தான் ட்ரீட் பண்ணுவேன். இப்ப ஏப்ரல் ஒண்ணு வருதில்லையா, அவனை விட நான் புத்திசாலின்னு நிரூபிக்க வேணாமா? அவனை ரொம்ப சாமர்த்தியமா முட்டாளடிக்கணும். ஒரு யோசனை சொல்லேன் சுதா."

"இந்த மாதிரி குயுக்தியான விஷயங்களுக்கு உங்களுக்குத்தான் நல்லா ஐடியா வருங்க. பழம் சாப்பிடறீங்களா?"

சுதா வாழைப்பழம் சீப்பிலிருந்து பிய்த்துக் தந்தாள்.

சுதந்திரா சற்று யோசித்து விட்டு சட்டென்று முகம் பிரகாசமாகி சொடக்கு போட்டான். "ஒரு பிரமாதமான ஐடியா சுதா."

"என்ன?"

"உன்னோட கையெழுத்தும், அவன் வைஃபோட கையெழுத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்.



அதுமட்டுமில்லாம உன் பேரு சுதா. அவன் வைஃப் பேரும் சுதா. இதை வெச்சி அவனுக்கு ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்கலாம்."

"எப்படி?"

"முதல்ல ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்துட்டு வாயேன் சொல்றேன்"

சுதா ஒரு வெள்ளைக் காகிதமும், பேனாவும், அடியில் வைத்து எழுத ஒரு புத்தகமும் எடுத்து வந்தாள்.

"நான் சொல்லச் சொல்ல அதே மாதிரி எழுது"

"சரிங்க" சுதா தன் வளையல்களைப் பின்னால் தள்ளிக் கொண்டு பேனாவைக் திறந்து கொண்டு தயாரானாள்.

"எழுது! அன்புக்கு இனிய சேகர், உங்கள் மேல் அதிகமாக ஆசை வைத்திருக்கும் சுதா எழுதிக் கொண்டது"

"என்னங்க இது?" என்றாள்.

"அதாவது மாதவன் வைஃப் யாரோ ஒரு கள்ளக்காதலனுக்கு லெட்டர் எழுதியிருக்கிற மாதிரி எழுதி அவன் பார்வையில் வெச்சிடப் போறேன். படிச்சதும் மிரண்டுடுவான். கொதிப்பான். சரியான சமயத்தில இது என் வேலைடான்னு சொல்லிடுவேன்"

"ஆனாலும் இது கொஞ்சம் ஓவரா இருக்குதுங்க"

"பரவாயில்லை. அவன் என்னை முட்டாளடிச்சதை விட நாலு மடங்கு அதிகமா முட்டாளடிக்க வேணாமா?"

"சரிங்க" என்று தயங்கி விட்டு சுதா அவன் சொன்னபடி கடிதம் எழுதி அடுத்த வரிக்காக நிமிர்ந்து பார்த்தாள்.

"சேகர், என்னதான் என் மனம் உங்களை விரும்பினாலும் இப்போது நான் இன்னொருவர் மனைவி. என் கணவர் ஊரில் இல்லாத சமயங்களில் என் வீட்டில நாம் அடிக்கின்ற கொட்டங்கள் போதாதா,

எதற்காக என்னை உங்களோடு ஓடி வரச் சொல்கிறீர்கள். வேண்டாம் சேகர். எனக்கு அதில் விருப்பமில்லை. வற்புறுத்தாதீர்கள். என்னை முழுக்க உரிமை கொண்டாட நினைக்காதீர்கள். நீங்கள் மிரட்டினாலும் இதற்குப் பணியமாட்டேன். இப்படிக்கு சுதா" என்றாள் சுதந்திரா.

சொல்லச் சொல்ல அசடு மாதிரி எழுதி தன் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தாள்.

"தேங்க் யூ சுதா. இந்த லெட்டரை வெச்சுக்கிட்டு நான் என்னவெல்லாம் செய்யப் போறேன் தெரியுமா?" என்றான் சுதந்திரா அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டி..

- - - - -

## 7



காரை அடுத்த தெருவில் நிறுத்தி விட்டு இறங்கி இந்தத் தெருவுக்கு நடந்து வந்தான் சுதந்திரா.

இரவு மணி எழைத் தாண்டியிருந்தது.

தனசேகர் தங்கியிருந்த அந்த வாடகை வீட்டை அடைந்து கதவைத் தட்டினான் சுதந்திரா.

கதவைத் திறந்த தனசேகருக்கு நம்ப முடியவில்லை. தன்னை ஆபீசில் அடித்து, அவமானப்படுத்தி வேலையை விட்டு விலக்கி முதலாளியேத் தன்னைத் தேடி வருவதென்றால்.. அவனுக்குப் பேச்சே வரவில்லை.

"என்ன தனசேகர், ஆச்சரியமா இருக்கா நான் உள்ளே வந்து உன்னோட கொஞ்சம் பேசலாமா?"என்றான் சுதந்திரா.

"வாங்க சார்"



உள்ளே வந்து காட்டப்பட்ட நாற்காலியில் அமர்ந்து அவனையும் அமரச் சொன்னதும், ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் சுதந்திரா, "தனசேகர், உனக்கு இன்னும் வேலை எங்கேயும் கிடைக்கலைன்னு கேள்விப்பட்டேன். கஷ்டமா இருக்குதிச்சு. மனுஷன் இருந்தா அடிமனசுல சில காம்பு மீறின சபலங்கள் எல்லாருக்கும் இருக்கத்தான் செய்யும். யாரும் வெளிப்படுத்தாம உள்ளுக்குள்ளேயே வெச்சிருப்பாங்க. நீ அதை வெளிப்படுத்தினதால வெறுப்பை சம்பாரிச்சுக்கிட்டே சரிதானா?" என்றான்.

"ஆமாம் சார். நான் கொஞ்சம் கேவலமாத்தான் நடந்துட்டேன்"

"இப்படி உணர்ந்து பேசறியே. இதான் மனுஷத்தனம். ஒரு தன்மானமுள்ள ஆம்பளைக்கு நியாயமா வரவேண்டிய கோபம் தான் எனக்கு வந்தது. என் ஸ்தானத்தில நீ இருந்து. உன் ஸ்தானத்தில் நான் இருந்திருந்தாலும் என்னை மாதிரி தான் நீயும் நடந்துகிட்டிருப்பே"

"வாஸ்தவம் தான் சார். எனக்கு உங்க பேர்ல கோபமில்லை எனக்கு என் மேலேயே வெறுப்பாயிடுச்சு."

"பரவாயில்லை. நடந்ததை விடு. என்னால உன் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாதுன்னு நினைச்சேன், தனசேகர், எனக்கு கல் நெஞ்சமில்லை. உன்னை மறுபடி என் ஆபீஸ்ல வேலை போட்டு தர முடியாது. ஆனா உனக்கு வேற ஒரு ஆபிஸ்ல வேலை வாங்கி தரலாம்னு நினைக்கிறேன்."

"சார், என்னால நம்பவே முடியலை. நீங்க தெய்வம் சார். இந்த உதவியை மட்டும் செய்யுங்க சார். ஜென்மத்துக்கும் மறக்க மாட்டேன்."

"கிரானைட்ஸ் எக்ஸ்போர்ட் பண்றவர் ஷ்யாம்னு என் ஃபிரெண்டு. அவர் கிட்டே சொன்னேன். உன்னைப் பார்த்துட்டு டிசைட் செய்யறேன்னு சொன்னார்."

"சரி சார். அவர் ஆபீஸ் அட்ரஸ் கொடுங்க சார். நான் போய்ப் பார்க்கிறேன்"

"இப்படி செய்யலாமா?"

"எப்படி சார்?"

"நாளைக்கு அவர் சிங்கப்பூர் போறார். ராத்திரி பிளைட். நான் தான் டிக்கெட் ஏற்பாடு செய்திருக்கேன். நாளைக்கு ராத்திரி அவரை வழியனுப்ப நான் ஏர்போர்ட் போறதா இருக்கேன். ராத்திரி ஒம்பதரை மணிக்கு சரியா நீ ஏர்போர்ட் வந்து கேட் கிட்டே நிக்கிறியா, நானே நேர்ல அவர்கிட்டே அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

"சரி சார்"

"நீ போறப்ப பஸ்ஸோ, ஆட்டோவோ பிடிச்சுப் போயிடு. திரும்ப வர்றப்ப என்னோட கார்ல வந்துடலாம்."

"ரொம் தேங்க்ஸ் ஸார்."

சுதந்திரா எழுந்து கொண்டான்.

"கரெக்டா வந்துடறியா, நான் வர்றதுக்கு கொஞ்சம் முன்னேப் பின்னே ஆனாலும் அங்கேயே வெயிட் பண்ணு. வந்துடறேன்."

"சரி சார்" என்றவனின் தோளில் தட்டிவிட்டுப் புறப்பட்டான் சுதந்திரா.

"சார், ஏதாச்சும் சாப்பிடறீங்களா?"

"பரவாயில்லைப்பா, சரி, ஒரு டம்ளர் தண்ணி கொடு. போதும்"

"இல்லை சார், ரெண்டு நிமிஷம் இருங்க. டீ போட்டுத் தர்றேன்"

டீ போட தனசேகர் சமையலறைக்குச் சென்ற நேரத்தில் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்ட சுதந்திரா அருகில் இருந்த மேஜையின் டிராயரை ஓசையில்லாமல் இழுத்து, உள்ளே இருந்த பல விதமான புக்ஸ், காகிதங்களுக்கு அடியில் தான் கொண்டு வந்திருந்த முன்னிரவில் சுதா எழுதிக் கொடுத்த கடிதத்தை செருகினான். டிராயரை மூடினான்.

டீ குடித்து விட்டு. "பிரமாதமாக டீ போடறேப்பா நீ" என்று அவன் கையைக் குலுக்கி, புன்னகைத்து வெளியே நடந்தான் சுதந்திரா.



# 8



உலகில் 99 சதவீதத்தினரின் யூகப்படி சுதந்திரா தன் மனைவி சுதாவைக் கொலை செய்யப் போகிற மனிதன்.

மாலை ஐந்து மணியை நெருங்கிக் கொண்டிருக்கும் போது, அலுவலகத்தில் பல பேர் வீட்டுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருக்க . அக்கவுண்டன்ட் நல்லசாமியைத் தன் அறைக்கு அழைத்தான் சுதந்திரா.

"சார், வருஷம் முடியப்போவுது. ஆனா நம்ம ஆபீஸ் கணக்குகள் இன்னும் அப்-டேட் டேலி ஆகலை. இன்னும் ஆறு மாதக் கணக்கு பாக்கியிருக்கு. வேலை சேர்ந்துக்கிட்டே போயிடுது. இன்னையிலேர்ந்து ஒரு வாரத்துக்கு தினம் பனிரெண்டு மணி வரைக்கும் நான் ஆபீஸ்ல இருந்து அக்கவுண்ட்ஸ் சரி பார்க்கலாம்னு இருக்கேன். எனக்கு ஒரே ஒரு அசிஸ்டெண்ட்ஸ் வேணும். உங்களால என்னோட இருக்க முடியுமா? அதுக்குண்டான ஓவர்டைம் சம்பளம் போட்டுத் தர்றேன். என்ன சொல்றீங்க?" என்றான்.

"நல்ல யோசனைதான் தம்பி. ஆனா நான் பத்து மணிக்கு மேல் கண்ணு முழிக்கிறதில்லை. டாக்டர் அட்வைஸ் அப்படி. அஞ்சு மணிக்கு ஆபீஸ் முடியுது. நான் ஒரு ஒம்போது மணி வரைக்கும் ஆபீஸ்ல உங்களுக்கு ஹெல்ப் பண்ண முடியும். ஒம்போது மணிக்கு நான் புறப்பட்டாதான் வீட்டுக்கு போய் சாப்பிட்டு பத்து மணிக்கு படுத்துக்க முடியும்" என்றார் நல்லசாமி.

"சரி. ஒம்போது மணி வரைக்கும் நீங்க இருங்க. அதுக்கப்புறம் பனிரெண்டு வரைக்கும் நான் மட்டும் தனியா பார்த்துக்கறேன்"

"சரி தம்பி"

"இன்னையிலேர்ந்தே ஆரம்பிச்சுக் கலாமில்லையா?".

"ஆரம்பிச்சுக்கலாம் தம்பி"

சொன்னபடி ஆபிஸில் இருக்கும் அனைவரும் புறப்பட்டுப் போனதும் சுதந்திராவும், நல்லசாமியும் மட்டும் அந்த அறையில் உட்கார்ந்து பழைய கணக்குகளைச் சரி பார்க்கின்ற வேலையைத் துவங்கினார்கள்.

இரவு மணி 8.45 ஆனதும் சுதந்திரா,"சார், நீங்க புறப்படுங்க டைம் ஆச்சு" என்றான்.

அவர் புறப்பட்டுச் சென்றதும், தன் டிராயரை இழுத்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த ஒட்டு தாடி, ஒட்டு முரட்டு மீசையைப் பொருத்திக் கொண்டு, அழுப்பு நிற லெதர் ஜெர்கினை பிரீஃப்கேசிலிருந்து எடுத்தணிந்து கொண்டான்.

அறையில் லைட், ஃபேன் எதையும் அணைக்காமல் மெதுவாக நழுவி ஆபீசைப் பூட்டினான். தனியாக இல்லாதப் பூட்டு. ஆபீஸ் திறந்து உள்ளே தாழிடப் பட்டிருக்கிறதா இல்லை பூட்டிக் கொண்டு வெளியேப் போய் விட்டார்களா என்று வெறும் பார்வையால் புரிந்து கொள்ள முடியாத, கதவிலேயேப் பொருத்தப்பட்டப் பூட்டு.

அந்தக் கட்டிடத்திற்கு இரண்டு இடங்களில் மாடிப்படிகள். தவிர ஒரு லிஃப்ட் இந்தக் கட்டிடத்தில் நான்கு மாடிகள், மொத்தம் நாற்பதுக்கும் மேற்பட்ட அலுவலகங்கள், சில ஸ்டாக்கிஸ்ட்ஸ் பொருள்களை வைத்திருக்கிறார்கள். பலர் அலுவலகங்களிலேயேத் தங்கியிருக்கிறார்கள். அதனால் ராத்திரி எந்த நேரத்திலும் அந்தக் கட்டிடத்தின் லிஃப்டையும் சரி, மாடிப்படிகளையும் சரி யாராவது உபயோகப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

லிஃப்டுக்கு ஆள் பகலில் ஒன்பது மணி முதல் மாலை ஐந்து வரை மட்டுமே அதன் பிறகு சொந்தமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கட்டிடத்திற்கென்று ஒரு வாட்ச்மேன் உண்டு.



மூன்று ஷிஃப்டுகளில் மூன்று பேர். செக்யூரிடி சர்வீசில் இருந்து வரும் ஆள்.

அவன் நியாயமாக கட்டிடத்திற்கு உள்ள விசாலமான நுழைவாசல் அருகே இருக்க வேண்டும். ஆனால் அவன் அந்த இடத்தில் பார்ப்பது அபூர்வம்.

வண்டிகள் பார்க் செய்யப்பட்டிருக்கும் பகுதியில் அந்த வண்டிகளின் காத்திருக்கும் டிரைவர்களோடு அரட்டையடித்துக் கொண்டு அங்கே தான் நிற்பான் வாட்ச்மேன்.

சுதந்திரா மாடிப்படிகள் வழியாக விடுவிடுவென்று இறங்கினான், வெளியேறினான். ஓரக் கண்ணால் பார்த்த போது நைட் வாட்ச்மேன் அருணகிரி தனது ஃபியட் பானெட்டில் அமர்ந்து கால்களைத் தொங்கவிட்டு சிகரெட் பிடித்தபடி வேறு இரண்டு பேரிடம் ஏதோப் பேசிக் கொண்டிருந்தான்.

சுதந்திரா நழுவி சாலைக்கு வந்து, அந்தக் கட்டிடத்தை விட்டுத் தொலைதூரம் விலகி வந்த பிறகு ஒரு ஆட்டோ அமர்த்திக் கொண்டு, அலங்கார் தியேட்டர் போய்யா என்றான். ஆட்டோ புறப்பட்டது.

மணி பார்த்துக் கொண்டான் மணி 8.55.

தனசேகர் ஏர்போட்டிற்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருப்பான்.

சுதந்திரா ஒரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். லேசான நடுக்கம் அவன் விரல்களில் இருந்தது.

திட்டப்படி எல்லாம் சரியாக நடக்கவேண்டும். தனசேகர் மாட்ட வேண்டும். நான் நினைத்த விடுதலை எனக்குக் கிடைக்க வேண்டும். சுதாவிடம் இருந்து விடுதலை.

அலங்கார் தியேட்டர் வாசலில் இறங்கி பணம் கொடுத்து அந்த ஆட்டோவை அனுப்பி விட்டு சற்று நடந்து சாலையில் வந்து கொண்டிருந்த மற்றொரு ஆட்டோக்காரனைப் பிடித்தான். ஏறிக் கொண்டான்.

"சைதாப்பேட்டை" என்றான். மற்றொரு சிகரெட்

பிடித்தான்.

சைதாப்பேட்டையில் தன் தெருவுக்கு முந்தின தெருவில் ஒரு தனி வீடு முன்பாக இறங்கி பணம் கொடுத்தான். ஆட்டோ போனதும் அந்தத் தெருவை விட்டு விலகி, தன் தெருவுக்குள் வந்தான். மெதுவாக நடந்தான்.

எட்டரை மணிக்கெல்லாம் தூங்க வீடு மாதிரி அமைதியாகி விடும் அந்தத் தெருவில் ஒரு சைக்கிள்காரன் கடந்து சென்றதைத் தவிர, வேறு நடமாட்டமே இல்லை.

அந்தப் பொது தொலைபேசிக்கு நடந்து உள்ளே வந்து கதவை மூடிக் கொண்டு காசு தயாராக வைத்துக் கொண்டு பார்கவி மாமி வீட்டிற்குப் போன் செய்தான் சுதந்திரா.

மூன்றாவது ரிங்கில் எடுக்கப்பட்டு, "ஹலோ" என்றது மாமி.

"மாமி நான் சுதந்திரா பேசறேன். ஆபீஸ்லேர்ந்து பேசறேன். நீங்க சுதாவைக் கூப்பிட வேணாம். ஆனா ஒரே ஒரு சேதி மட்டும் சிரமம் பார்க்காம சொல்லிட முடியுமா மாமி?"

"என்ன சொல்லணும்? சொல்லுங்க தம்பி?"

"ஒண்ணுமில்லை. எனக்கு இங்கே ஆபீஸ்ல அக்கவுண்ட்ஸ் பார்க்க வேண்டிய வேலை இருக்கு. நான் வர்றதுக்குப் பனிரெண்டரை மணியாயிடும். எதிர்பார்த்துக்கிட்டிருப்பா. கொஞ்சம் சொல்லிடறீங்களா? இப்படி பத்து மணிக்கு உங்களைத் தொந்தரவு பண்ண வேண்டியிருக்கு. மன்னிச்சிடுங்க மாமி."

"பத்து மணியா? மணி ஒன்பதே கால் தானே ஆகுது. பரவாயில்லை தம்பி, நான் சொல்லிடறேன் வெச்சிடுங்கோ"

வைத்து விட்டான் சுதந்திரா. அந்தக் கூண்டுக்குள்ளிருந்து தன் வீட்டு வாசலையும், பக்கத்து வீட்டு வாசலையும் அவனால் பார்க்க முடிந்தது.



அந்த விநாடி மாமி அவர் வீட்டு வாசலில் வெளிப்படுவதைப் பார்த்தான். தன் வீட்டு வாசலை அடைந்து, கதவைத் தட்டி காத்திருக்க, சுதா திறப்பதைப் பார்த்தான். மாமி தகவல் சொல்லித் திரும்ப, சுதா கதவை மூடிக் கொள்ள, மாமி தன் வீட்டுக்குள் சென்று கதவை மூடிக்கொண்டதும் இவன் தொலைபேசிக் கூண்டை விட்டு வெளி வந்தான்.

நேராகத் தன் வீட்டிற்கு வந்தான். தாடி, மீசையை அகற்றி பேண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, ஜெர்கினைக் கழற்றி அருகில் இருந்த இருட்டுச் செடி மேல் போட்டான். கதவை சன்னமாகத் தட்டினான்.

கதவைத் திறந்த சுதா ஆச்சரியமாக விழிகளை விரித்தாள்.

அவசரமாக உள்ளே வந்து கதவை மூடினான்.

"வர்றதுக்கு லேட்டாகும்னு நீங்க போன் செஞ்சதா இப்பதான் மாமி வந்து சொல்லிட்டுப் போனாங்க. இப்படி சொல்லிட்டு வந்து நிக்கிறீங்க?" என்று ஆச்சர்யமாய் கேள்வி கேட்ட சுதா காட்டன் நைட்டியணிந்திருந்தாள்.

"அப்படித்தான் மாமிக்கு போன் செஞ்சேன். அப்புறம் நாளைக்குப் பார்த்துக்கலாம்னு புறப்பட்டு வந்துட்டேன் சுதா"

"கார் சத்தத்தையேக் காணோம்?"

"கார் ரிப்பேர், ஆட்டோல வந்தேன்"

"ஆட்டோ சத்தம் கூட கேக்கலையே"

"என்ன அசட்டுத்தனமா கேக்கறே? நீ கவனிக்கலைன்னா என்ன செய்யச் சொல்றே?"

"அதில்லைங்க, மாமி சொல்லிட்டுப் போய் ரெண்டு நிமிஷம் கூட ஆகலை. இப்பதான் போன் வந்ததாச் சொன்னாங்க. அதான் ஒண்ணும் புரியலை எனக்கு"

"அப்படியாச் சொன்னாங்க. நான் அவங்களுக்குப் போன் பண்ணி அரை மணி நேரமாச்சே. சரி, விடு, நீ சாப்பிட்டியா?"

"ஆச்சுங்க. நீங்க?"

"எட்டரைக்கு நானும் அக்கவுண்டண்ட் நல்லசாமியும் சாப்பிட்டோம். சரி வா" அவள் கையைப் பற்றி படுக்கையறைக்கு அழைத்து வந்த சுதந்திரா அறையின் கண்ணாடி ஜன்னல்களை மூடி விட்டு வந்து சட்டையும் பேண்ட்டும் கழற்றி லுங்கி மட்டுமணிந்து இரவு விளக்கை மட்டும் போட்டுக் கொண்டு அவளை அணைத்து கட்டிலுக்கு நடத்தி "நல்ல மூடுல வந்திருக்கேன்" என்றான்.

"சமையல் கட்டில கொஞ்சம் வேலை பாக்கியிருக்குங்க" சிணுங்கினாள்.

"அங்கே என்னைக்குத்தான் தான் வேலை இல்லை? பேசாம இரு"

அவளை அள்ளி கட்டிலில் போட்டு அருகில் படுத்த சுதந்திரா தலையணையால் அவள் முகத்தில் செல்லமாக அடித்தான். "ஏய்! ஒரு சின்ன விளையாட்டு" என்றான்.

"என்னங்க?"

"தலைகாணியால உன் மூஞ்சை அழுத்தறேன். மூச்சு முட்டுமில்லையா? எவ்வளவு செகண்ட் உன்னால தாக்குப் பிடிக்க முடியும்னு பார்க்கணும். அப்புறம் நீ என் முகத்தில் பொத்து. யார் அதிக செகண்ட் தாக்குப் பிடிக்கிறாங்கன்னு பார்க்கலாம். மூச்சு திணறப்போ கையை ஆட்டு. உடனே நான் தலையணையை எடுத்துடறேன். ஒக்கே?"

"எதுக்குங்க. இந்த விபரீதமான விளையாட்டெல்லாம்?"

"ஒரு த்ரில்லுக்குத்தான் கமான் சுதா"

"சரிங்க" என்றாள் அப்பாவி சுதா. வாழ்க்கையில் அவளின் கடைசி வார்த்தை!

தலையணையை அவள் முகத்தின் மேல் வைத்தான் சுதந்திரா அழுத்தத் துவங்கினான்.

1,2,3,4,5,6,7......

எட்டாவது விநாடியில் அவள் மூச்சு முட்ட கையை



ஆட்டினாள். ஆனால் அவன் அழுத்தத்தை அதிகரித்தான்.

சுதா இப்போது போராடத் துவங்க, அவளின் உடலைத் தன் உடல் கனத்தால் அழுத்தி, துடிக்கும் அவளின் இரண்டு கைகளையும் தன் முழங்கால்களால் அழுத்தி, முகத்தில் வைத்த தலையணையை எடுக்காமல் பிடிவாதமாக அவன் அழுத்தத் துவங்க.....

வீட்டுக்கு வெளியே வாசலுக்கு வந்து சேர்ந்தாள் மாலினி.

ஹாஸ்டலில் இருந்து பஸ் பிடித்து வந்திருக்கும் சுதாவின் தங்கை மாலினி கதவை இரண்டு தரம் தட்டினாள். பதில் இல்லை.

வாசலில் கார் இல்லை என்பதால் அத்தான் இன்னும் ஆபீசில் இருந்து வரவில்லை என்பதை உணர்ந்த மாலினி. உறங்கிவிட்ட தன் அக்காவை அவள் அறையில் இருக்கும் ஜன்னல் கதவைத் தட்டி எழுப்பலாம் என்றுத் தீர்மானித்து வீட்டின் சைடு பகுதியில் சுற்றி வந்தாள் மாலினி.

வீட்டின் வாசல் கதவு தட்டப்படுவதை உணர்ந்த சுதந்திரா திடுக்கிட்டான். இங்கே உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் சுதா. இப்போதுதான் அவளின் எதிர்ப்பு குறையத் துவங்கியிருந்தது.

இப்போது இவளை விட்டுவிட்டு வாசலுக்குச் சென்றால் பிழைத்து விடுவாள், எழுந்து விடுவாள், உஷாராகி விடுவாள்.

சுதந்திரா தன் அழுத்துதலை மேலும் தொடர -

மாலினி அந்தக் கண்ணாடி ஜன்னலை நெருங்கினாள். உள்ளே தொங்கிய திரை லேசாக அசைந்து கொண்டிருக்க சின்ன இடைவெளி வழியே கண் புதைத்துப் பார்த்த அவள் திடுக்கிட்டாள்!

அய்யோ! அத்தான் என்ன செய்து கொண்டிருக்கிறார்! அக்காவின் முகத்தில் தலையணையை வைத்து...நான் பார்ப்பது நிஜம் தானா? அம்மா விளையாடுகிறார்களா? இல்லை....

சேர்ந்து கவனித்தாள் மாலினி.

உள்ளே சுதந்திரா தலையணையை சுதாவின் முகத்திலிருந்து எடுத்துப் போட்டான். சுதா தலை தொங்கியிருக்க செத்துப் போயிருந்தாள்.

மாலினி தன் வாழ்வில் வாங்கிய உச்சமான அதிர்ச்சியில் வார்த்தை வராமல், அடுத்த செயல் புரியாமல் விக்கித்துப் போய் நின்றிருக்க... ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.

அக்காவை, அத்தான் கொலை செய்து விட்டார். அதை நான் பார்த்து விட்டேன். இப்போது என்னை அவர் பார்த்தால், சத்தியமாக என்னையும் கொலை செய்ய...தன் இரட்டையாக துடிக்கும் இதயத்தைத் தொட்டுக் கொண்டு அப்படியே நின்றாள் மாலினி.

சுதந்திரா அவசர அவசரமாக சட்டையணிந்து, பேண்ட் அணிந்து அறையை விட்டு வந்து, வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வெளியேறி டோர் பின்புறமிருந்த இருட்டில் பதுங்கி, இருளிலேயே மாலினி நின்றிருந்ததற்கு நேரெதிர் சைடு பகுதியில் நகர்ந்து வந்து வீட்டின் வாசலைக் கவனித்தான்.

யாரையும் காணவில்லை. கதவைத் தட்டியது யார்?

யோசித்துக் கொண்டு நிற்க, அவனுக்கு அவகாசமில்லை. செடி மேல் போட்டிருந்த ஜெர்கினை எடுத்துக் கொண்டு சாலைக்கு வந்து விரைந்து, அதை அணிந்து அதே வேகத்தில் மீசை, தாடி பொருத்தி முக்கிய சாலைக்கு வந்து ஆட்டோவை நிறுத்தி ஏறி. 'அலங்கார் தியேட்டர்' என்றான் சுதந்திரா.

> *உணவை சுவைத்து சாப்பிட நாக்கு பயன்படுகிறது. நாவில் உணர்ச்சி மொட்டுகள் அதிகம். நாக்கின் நுனியிலும் இரு ஓரங்களிலும் அடிப்புறத்திலும் உணர்ச்சி நரம்புகள் சுவையை ருசிக்கும் கருவிகளாக முடிகின்றன. கசப்பு, நாவின் அடிப்புறத்திலும், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு இரு விளிம்புகளிலும், இனிப்பும், உப்பும் நுனியிலும் அறியப்படும். ருசிக்கு ருசி தரும் வாசனையும் வேண்டியிருப்பதால் ஜலதோஷம் தோன்றும்போது வாசனையும் சுவையும் மறைந்து விடும்.*



# 9.



இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன் தன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் புதைத்து விட்டு நிமிர்ந்து எதிரே மூச்சு வாங்க நின்று கொண்டிருக்கும் மாலினியைப் பார்த்தார்.

"மேடம், கொஞ்சம் பதட்டப்படாம சொல்லுங்க, யாரு, யாரை, எங்கே கொலை செய்திருக்காங்க?"

"என் சொந்த அக்காவை என் அத்தான் அதாவது அவ புருஷன் சுதந்திரா முகத்திலே தலையணை அழுத்தி கொலை செஞ்சதை நான் என் கண்ணால பார்த்தேன். உடனே வாங்க சார். ப்ளீஸ்....."

ஜெயச்சந்திரன் எழுந்து கொண்டார்.

ஜீப்பில் அவளையும் ஏற்றிக் கொண்டு பயணம் செய்த போது அவர் யார் எங்கே இருக்கிறாள், எப்படிப் பார்த்தாள் போன்ற விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

சுதந்திராவின் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டித் தட்டிப் பார்த்து அது திறக்கப் படாததில் பின் பக்கம் வந்து, அந்தக் கதவு திறந்திருப்பதைப் பார்த்து உள்ளே நுழைந்து..

படுக்கையறையில் உஷ்ணம் குறையத் துவங்கியிருந்த சுதாவின் பிணத்தைப் பார்த்து தொப்பியைக் கழற்றிக் கொண்டார் ஜெயச்சந்திரன்.

"இதோ.. இதோ... இந்த ஜன்னல் மேலேர்ந்து தான் பார்த்தேன்" என்ற மாலினி. "அக்கா..அக்கா!" என்று பிணத்தின் மேல் விசும்பலுடன் விழுந்து கதறப் போனவளைத் தடுத்தார்.

"ப்ளீஸ்.. டோண்ட் டச். வெளியில போயிடலாம் வாங்க; கொஞ்சம் உடைஞ்சுடாம தைரியமா இருங்க. கொலை செஞ்ச சுதந்திரா தப்பிப் போயாச்சு. அவனைப்

பிடிக்கணும். அதுக்கு நீங்க தான் உதவணும். நீங்க கொலையைப் பார்த்தப்போ மணி என்ன இருக்கும்?"

"ஒன்பதரை சார்"

ஜெயச்சந்திரன் தன் ரிஸ்ட் வாட்சைப் பார்த்துக் கொண்டார். நேரம் இப்போது 10.10 ஆகியிருந்தது.

"சுதந்திரா எங்கேப் போயிருக்க முடியும்?"

"தெரியலை சார்"

"அவருக்கு என்ன தொழில்?"

"பாரிஸ் கார்னர்ல சுதா டிராவல்ஸ்னு ஆபீஸ் வெச்சிருக்கார்."

"சரி. பக்கத்திலே போன் எங்கே இருக்கு?"

"அடுத்த வீட்டுல இருக்கு சார்"

"நீங்க இங்கேயே இருங்க மாலினி"

இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன் பக்கத்து வீட்டிற்கு வந்து அழைப்பு மணிப் பித்தானை அழுத்தினார்.

பார்கவி மாமி தூக்கக் கலக்கமாய் திறந்து போலீஸ் உடுப்பை பார்த்து அரண்டு போனாள்.

"எக்ஸ்க்யூஸ் மி மேடம். பக்கத்து வீட்ல ஒரு மர்டர் நடந்திருக்கு. நான் உங்க டெலிபோனை உபயோகிக்க வேண்டியிருக்கு"

"என்னது கொலையா? பக்கத்து வீட்லயா? யாரு?"

"சுதான்னு ஒரு பொண்ணை...தெரியுமா?"

"நல்லாத் தெரியும் சார், அவளைக் கொன்னுட்டாங்களா? என்ன சொல்றீங்க நீங்க. இப்பதானே நான் பார்த்துப் பேசிட்டு வந்தேன்."

"இப்பத்தான்னா எப்போ?"

மாமி கழற்றி மேஜையில் வைத்திருந்த கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டு சுவர் கெடிகாரத்தில் பார்த்து. "மணி இப்ப பத்தே கால்



ஆகுது. நான் ஒம்போதே காலுக்கு அவ வீட்டுக் கதவைத் தட்டி அவ புருஷன் போன் செஞ்ச விஷயத்தைச் சொல்லிட்டு வந்தேனே.." என்றாள்.

புருவங்களை நெரித்தபடி பார்த்தார் ஜெயச்சந்திரன். என்ன சொல்றீங்க நீங்க? சுதாவோட புருஷன் சுதந்திராவா உங்களுக்கு போன் செஞ்சது? என்றார்.

"ஆமாம்."

"எப்போ?"

"ஒன்பதேகாலுக்கு"

"எங்கேர்ந்து?"

"அவரோட ஆபீஸ்லேர்ந்து"

" பாரிஸ் கார்னர்லேர்ந்தா? ஒன்பதே காலுக்கா?"

"ஆமாம் சார்"

"சரி. போன் செஞ்சி என்ன சொன்னார்"

"அவர் கொஞ்சம் அக்கவுண்ட்ஸ் வேலை பார்க்கிறதாகவும் வீட்டுக்கு வர பனிரெண்டரை மணியாகும்னும் இதை சுதாகிட்டே சொல்லிடும்படியும் சொன்னார். நான் உடனேப் போய் சொல்லிட்டு வந்தேன்."

ஜெயச்சந்திரன் குழம்பினார். என்ன இது! பாரிஸ் கார்னர் ஆபீஸில் இருந்து ஒன்பதே காலுக்கு போன் செய்யும் ஆசாமி சைதாப்பேட்டையில் ஒன்பதரைக்கு கொலை செய்ய முடியுமா? குறைந்தது அரை மணி நேரமாவது ஆகுமே அங்கிருந்து இங்கே வர!

ஆனால் மாலினி தன் கண்ணால பார்த்திருக்காளே!

சுதந்திராவுக்கு பதிலாக வேறு யாரையோப் பார்த்துவிட்டு சுதந்திரா என்று சொல்லுமளவு புரியாதவளா என்ன? கல்லூரி மாணவி அவள் ஸ்டேஷனுக்கு வந்த பதட்டம் என்ன? சொன்ன தோரணை என்ன? வீட்டில் அழுதது என்ன? - நோ! அவள் பொய் சொல்லவில்லை.

எனில்... சுதந்திரா திட்டமிட்டு காரியம் செய்திருக்க வேண்டும். இரவு பன்னிரெண்டரையாகும் திரும்ப என்றால் பன்னிரெண்டு வரையாவது அவன் தன் ஆபீசில் இருக்க வேண்டுமல்லவா?

இப்போது மணி 10.15. இந்த நிமிடம் அவன் ஆபீசில் இருக்க வேண்டுமே.

"மேடம், சுதந்திராவோட ஆபீஸ் நம்பர் என்ன?"

மாமி சொல்ல, ஜெயச்சந்திரன் டயல் செய்யத் துவங்கினார்.

சுதந்திரா தன் ஆபீஸ் இருக்கும் கட்டிடத்திற்கு ரொம்ப முன்னதாக அந்த அலங்கார் அருகில் மாதிரி… ஆட்டோவை விட்டு இறங்கிக் கொண்டான். நிழலாகப்… பார்த்து நடந்தான்.

பார்க்கிங் பகுதியில் இன்னும் அரட்டைத் தொடர… அடைந்ததை இவன் கட்டிடத்தின் வாசலை… வாட்ச்மேன் அருணகிரி கவனிக்கவில்லை.

லிஃப்டில் இரண்டாவது மாடிக்கு வந்த சுதந்திரா… தன் ஆபீஸ் அருகில் இருந்த ஜன்னலருகில் வந்து… தன் ஜெர்கின், மீசை, தாடி கழற்றி விட்டு இரண்டு… கைகளையும் குவித்து, "அருணகிரி" என்று கீழ்… நோக்கிப் பார்த்துக் கத்தினான்.

அருணகிரி திரும்பிப் பார்த்து, "என்ன சார்?" என்றான் அங்கிருந்தே.

"ஒரு டீ வாங்கிட்டு வாயேன்."

"சரி சார்."

பலமுறை இது போல அருணகிரிக்கு வேலை… கொடுத்து அதற்காகத் தனியாக டிப்ஸ் கொடுத்திருக்கிறான் சுதந்திரா.

தன் ஆபீஸ் கதவில் சாவியை வைத்த சுதந்திரா… உள்ளே டெலிபோன் ஒலிப்பதை சன்னமாகக் கேட்டதும், அவசர அவசரமாகக் கதவைத் திறந்து…



…தன் அறைக்கு வந்து ரிசீவரை எடுத்து, "ஹலோ சுதந்திரா ஸ்பீக்கிங்" என்றான் தன் மூச்சு இரைத்தலைக் கட்டுப்படுத்திக் கொண்டு...

"ஹலோ, நான் இன்ஸ்பெக்டர் ஜெயசந்திரன் பேசறேன்"

"இ.இன்ஸ்பெக்டரா?"

"ஆமாம். போலீஸ் இன்ஸ்பெக்டர், உங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டு போன்லேர்ந்து பேசறேன். நீங்க எப்போ ஆபீசுக்குப் போனீங்க?"

"ஏன் சார்? காலை ஒம்பது மணிக்கு"

"அதில்லை. இப்போ வீட்டுக்கு வந்துட்டு திரும்பி எப்போ போனீங்க?"

"புரியலை. நீங்க என்ன கேக்கறீங்க? நான் காலை ஒம்போது மணிக்கு வீட்டை விட்டு வந்தவன் தான். இங்கே ஆபீஸ்ல அக்கவுண்ட்ஸ் பார்த்துக்கிட்டிருக்கேன். நடுவில வீட்டுக்கு நான் வரலையே. அங்கே ஏதாவும் ப்ராப்ளமா சார்?"

"சொல்றேன். ஆபீஸ்ல நீங்க மட்டும் தான் இருக்கீங்களா?"

"ஆமாம்."

"போன் அடிச்சப்ப வேலை பார்த்துக்கிட்டு இருந்தீங்களா?"

"ஆமாம்"

"பத்தாவது ரிங்லதானே போனை எடுத்தீங்க. ஏன்?"

"பாத்ரூம் போயிருந்தேன் சார். வந்து எடுத்தேன். ஏன் இப்படி எல்லாம் கேக்கறீங்க? என்ன விஷயம்? அதை முதல்ல சொல்லுங்க சார். எனக்கு பதறுது."

"நீங்க உடனேப் புறப்பட்டு வீட்டுக்கு வாங்க. நேர்ல பேசலாம்."

எதிர்முனை துண்டிக்கப்பட்டதும் கர்சீப் எடுத்து நெற்றியில் ஒற்றிக் கொண்டான் சுதந்திரா.

எப்படி இவ்வளவு சீக்கிரம் போலீஸ் வீட்டுக்கு வந்தது? என் மேல் சந்தேகப்பட்டு விசாரிப்பது போலவே விசாரிக்கிறாரே இன்ஸ்பெக்டர்? யார் அவருக்கு தகவல் தந்தது? கொலை செய்து கொண்டிருந்தபோது கதவைத் தட்டியது யார்?

ரொம்ப சாமர்த்தியமாக கொலை பழி தனசேகர் மேல் விழும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டு, கடைசியில் நான் மாட்டிக் கொள்ளப் போகிறேனா?

"சார், டீ" என்று வந்தான் அருணகிரி. "என்ன சார் இவ்வளவு நேரமாச்சு. வீட்டுக்குப் போகலை?"

"கணக்கு வேலை நிறைய இருந்திச்சு அருணகிரி. "கணக்கு வேலை நிறைய இருந்திச்சு அருணகிரி. பனிரெண்டு மணி வரைக்கும் பார்க்கலாம்னு நினைச்சேன்"

"உங்க கார் நின்னுக்கிட்டே இருந்திச்சா. என்னடா சார் இன்னும் வீட்டுக்கு போகலைன்னு நினைச்சேன். வேணம்னா பிளாஸ்க்ல இன்னொரு டீ வாங்கி வைக்கட்டுமா?"

"வேணாம். போன் வந்திச்சு. ஒரு இன்ஸ்பெக்டர் போன்ல பேசினார். உடனே புறப்பட்டு வீட்டுக்கு வரச் சொன்னார். விபரம் சொல்லலை. எனக்கு ஒண்ணும் புரியலை. படபடப்பா இருக்கு அருணகிரி" என்று எழுந்தான் சுதந்திரா.

"பதறாமப் போங்க சார். ஒண்ணும் இருக்காது. உங்க நல்ல மனசுக்கு கவலை எதுவும் வராது. நிதானமா காரை ஓட்டிக்கிட்டுப் போங்க"

ஆபீஸைப் பூட்டிக் கொண்டு காரை வேகமாகச் செலுத்தினான்.

நான் இங்கே தான் இருந்தேன் என்று அருணகிரி சாட்சி சொல்லுவான். நான் ஒன்பதேகாலுக்கு போன் செய்ததை மாமி சாட்சி சொல்லுவாள். தனசேகரை ஆபிஸ்ல நான் அடித்து வேலையில் இருந்து நிறுத்தியதை மொத்த ஆபீசும் சாட்சி சொல்லும். தனசேகர் வீட்டில் சோதனைப் போட்டால் சுதா தனசேகர் வீட்டில் சோதனைப் போட்டால் சுதா என் கைப்பட எழுதின கடிதம் கிடைக்கும்.



மனைவியின் நடவடிக்கை சரியில்லை என்று மாமி சொல்வாள்.

அப்படியிருக்க நான் ஏன் பதட்டப் பட வேண்டும்? இயல்பாக திட்டமிட்டபடி நடந்து கொள்ள வேண்டும்.

வீட்டுக்குப் போனதும் சுதா கொலை செய்யப்பட்டதைச் சொல்வார் இன்ஸ்பெக்டர். அதிர்ச்சியடைய வேண்டும். அடித்துக் கொண்டு அழ வேண்டும். விசாரிப்பார். தனசேகரை சந்தேகப்படுவதாகச் சொல்ல வேண்டும்.

தட்ஸ் ஆல். இதில் என்னை எப்படி சந்தேகப்பட முடியும்? யாராவது நான் கொலை செய்வதைக் கண்ணால் பார்த்திருந்தால் தான் நான் பயப்பட வேண்டும்.

யாரும் தான் பார்க்கவில்லையே பின் ஏன் நான் பதற வேண்டும்? இப்போது நான் செய்ய வேண்டியது எல்லாம் நடிப்பு! நடிப்பு! நடிப்பு மட்டும் தான்.

காரை சீரான வேகத்தில் ஓட்டினான் சுதந்திரா.

## 10



"மிஸ். மாலினி. உங்களுக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லையே? நீங்க பார்த்தது உங்க அக்கா புருஷனைத்தானே? என்றார் இன்ஸ்பெக்டர் ஜெயசந்திரன்.

"ஆமாம் சார். அவரை இப்பத்தான் புதுசா பார்க்கறேனா? குழப்பமே இல்லை சார். அக்காவை கொலை செஞ்சது அவரே தான். இதை எந்தக் கோர்ட்ல வேணும்னாலும் வந்து சொல்றேன்" என்றாள் மாலினி படபடப்பாக.

"அப்போ மிஸ்டர் சுதந்திரா ரொம்ப ரொம்ப ஸ்மார்ட்டா யோசிச்சு திட்டம் போட்டிருக்கார்ன்னு சொல்லணும்.

கொலை செஞ்சிட்டு நேரா ஆபீஸ் போய் உக்காந்துட்டு போனில அப்பாவி மாதிரிப் பேசறார். அப்படித்தானே?"

"ஆமாம் சார்."

"சரி வரட்டும். அவர் வந்தா ஒரு சின்ன ப்ளே பண்ணலாமா? நீங்க தான் ஒத்துழைக்கணும்"

"சொல்லுங்க சார். நான் என்ன செய்யணும்?".

ஜெயச்சந்திரன் தன் யோசனையைச் சொன்னதும் தலையசைத்துச் சம்மதித்தாள் மாலினி.

"சரி, அவர் வரட்டும் உங்கக்காவை அவர் எதனால் கொலை செய்திருக்கார்ன்னு நீங்க நினைக்கிறீங்க?"

"தெரியலை சார்"

"கொலை, சின்ன விஷயமா? கொலை செய்யப்பட வேண்டிய அளவுக்கு உங்கக்கா என்ன தப்பு செஞ்சாங்கன்னு தெரிய வேணாமா?"

"நிஜமா எனக்குப் புரியலை சார். அவங்க ரெண்டு பேரும் ரொம்ப ரொம்ப சந்தோஷமாத்தான் இருந்தாங்க. நான் பத்து நாளைக்கு ஒரு தடவை, பதினைஞ்சு நாளைக்கு ஒரு தடவை தான் வந்து போவேன். நான் வர்றப்போ அவங்க நடுவில எந்தப் பிரச்னையையும் பார்த்ததில்லை"

"பிரச்னை இல்லாம கொலை வரைக்கும் வருமா?"

"வராது. எனக்கு தெரியல்லன்னுதான் சொல்றேன். ஏதாச்சும் பிரச்சினை இருந்திருக்கலாம். என்கிட்டே சொன்னா நான் வருத்தப்படுவேன்னு அக்கா என்கிட்டே சொல்லாம மறைச்சிருக்கலாம்."

"உங்கத்தானுக்கு வேற ஏதாச்சும் பெண்ணோட தொடர்பு இருக்கா?"

"எனக்குத் தெரிஞ்சு கிடையாது சார்."

"அவர் வர்றதுக்குள்ளே அவரோட பெட்ரூம்ல கொஞ்சம் நோண்டிப் பார்த்துடறேன்" என்று ஜெயச்சந்திரன் கொலை நடந்த அறைக்குள் மீண்டும் நுழைந்தார்.



பதினைந்து நிமிடங்கள் அவர் அந்த அறையில் சோதனை போட்ட வரையில் சுதந்திரா மேல் சந்தேகப்படும்படியாக எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

காரில் வந்து இறங்கினான் சுதந்திரா. அறைக்குள்ளிருந்து வெளியே வந்தார் ஜெயச்சந்திரன். சோபாவில் முழங்கால்களில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள் மாலினி.

உள்ளே வந்த சுதந்திரா மாலினியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். இவள் எப்படி இங்கே?

"மாலினி நீ எப்போ வந்தே? ஏன் அழறே? என்ன விஷயம்? சுதா எங்கே? என்று பதட்டம் காட்டிய சுதந்திரா ஜெயச்சந்திரனிடம் வந்து, "சார், நீங்க தான் போனில பேசினதா? என்ன விஷயம்? என் சுதா எங்கே? சொல்லுங்க சார்" என்றான்.

"ஸாரி சார். உங்க மனைவி இறந்துட்டாங்க." என்று ஜாக்கிரதையாக வார்த்தைகளை உபயோகித்து அவன் முகத்தில் ஊடுறுவினார்.

"சுதா!" என்று அலறினான். படுக்கையறைக்குள் ஓடினான். அவள் உடல் மேல் விழப்போனவனை பின்னாலேயே வந்த ஜெயச்சந்திரன் கை வைத்துப் பிடித்துத் தடுத்தார்.

"விடுங்க சார் என்னை! அய்யோ! சுதா! சுதா! என்னம்மா இது! என்ன ஆச்சு உனக்கு! அய்யோ! செத்துப் போயிட்டியே! நிஜமாவா சார்! எப்படி சார்? யார் சார் என் சுதாவை இந்த மாதிரி பண்ணாங்க?" கதறினான்.

"என்ன கேட்டீங்க?" என்றார் ஜெயச்சந்திரன் நிதானமாக.

"என் சுதாவை இப்படிப் பண்ணினது யாருன்னு கேட்டேன். கொன்னவன் யாருன்னு கேட்டேன். சொல்லுங்க சார்! யார் செஞ்சது இப்படி?"

உடைந்து அழுதான். கொஞ்ச நேரம் அவனை அழவிட்டு விட்டு, பிறகு அவனை வெளியேற்றி அமர

வைத்து, ஆசுவாசப்படுத்தி குடிக்க தண்ணீர் கொடுத்து, "சுதந்திரா, உங்க மனைவி செத்துட்டாங்கன்னுதானே நான் சொன்னேன். கொலை செஞ்சது யாருன்னு ஏன் கேட்டீங்க நீங்க?" என்றார் கூலாக.

சுதந்திராவுக்குத் திக்கென்றது. உடனே சுதாரித்து, "சாதாரணமா சாவுன்னா போலீஸ் ஏன் வாணும்?" என்றான்.

"சாதாரண சாவுதானான்னு யாராச்சும் சந்தேகப்பட்டுக் கூப்பிட்டாக் கூட நாங்க வருவோமே சார்"

"என் வைஃப் உடம்பு மேல விழுந்து என்னைக் கதற விடாமக் தடுத்தீங்களே... சாதாரண சாவா இருந்தா அப்படி செய்வீங்களா?"

ஜெயச்சந்திரனுக்கு இப்போது ஜெர்க் ஏற்பட்டது. 'நீ ஸ்மார்ட்' என்று நினைத்துக் கொண்டார்.

"மாலினி, நீ எப்போ வந்தே?"

"ரெண்டு நாள் லீவு வந்திச்சு. அதனால புறப்பட்டு வந்தேன். வந்து கதவைத் தட்டினா அக்கா திறக்கலை. பின்பக்கம் வந்து பார்த்தேன். பின் கதவு திறந்து கிடந்துச்சி. உள்ளே வந்து பார்த்தா அக்கா செத்துக் கிடந்தா. உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி இவர் கிட்டே சொன்னேன்" என்று ஜெயச்சந்திரன் சொல்லிக் கொடுத்ததைப் போலவே மாற்றிச் சொன்னாள் மாலினி.

"தைரியமா இருங்க சார். கொலைகாரனை சீக்கிரம் பிடிச்சுடுவோம்" என்ற ஜெயச்சந்திரன் வந்து நின்ற ஆம்புலன்சில் பிணத்தை ஏற்றியனுப்பு வதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார்.

போட்டோகிராபர் மொபெட்டில் வந்து சேர்ந்து தாமதத்திற்குத் திட்டு வாங்கிக் கொண்டு அவர் சொன்ன கோணங்களில் சுதாவை போட்டோ எடுக்கத் துவங்கினான்.

அவர்கள் பரபரப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்க,



"அத்தான், கொஞ்சம் இப்படி வாங்களேன்" என்று மாலினி எழுந்து சமையலறைக்குள் செல்ல, எழுந்து அவளைத் தொடர்ந்து வந்து நின்ற சுதந்திரா, "என்ன?" என்றான் மூக்கை உறிஞ்சியபடி.

குரலைக் குறைத்துக் கொண்டு கேட்டாள் அவள், "ஏன் இப்படி செஞ்சீங்க நீங்க?"

"என்ன செஞ்சேன்?"

"நான் பார்த்துட்டேன் அத்தான்"

"என்ன பார்த்தே?"

"ஷ்! சத்தம் போட்டுப் பேசாதீங்க. என்ன இருந்தாலும் நீங்க என் அத்தான். நீங்க ஜெயிலுக்குப் போயிடக் கூடாதுன்னுதான் இது வரைக்கும் நான் அந்த இன்ஸ்பெக்டர் கிட்டேச் சொல்லலை"

உள்ளே எழுந்த கலவரத்தை வென்றபடி, "எதைச் சொல்லலைன்னு சொல்றே நீ?" என்றான் சுதந்திரா.

"நீங்க தலையணையால அக்காவோட முகத்தில் அழுத்தி அவளைக் கொலை செஞ்சதை ஜன்னல் வழியா நான் என் கண்ணால பார்த்தேன் அத்தான். இப்பப் போய் அவர் கிட்டே சொல்லிடட்டுமா?"

"நோ! சொல்லாதே!" என்றான் கெஞ்சலாக.

"வெரிகுட்" என்று கை தட்டியபடி உள்ளே வந்தார் ஜெயச்சந்திரன், "ஆக உங்க குற்றத்தை ஒப்புக்கறீங்களா சுதந்திரா?"

"வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்"-

"உங்க மனைவியை நீங்க கொலை செஞ்சதை இப்ப நீங்களே உங்க வாயால ஒத்துக்கிட்டீங்களே..."

"இவதான் உளறினா, நீங்களும் உளர்றீங்களே!"

"நோ சொல்லாதேன்னு சொன்னீங்களே...."

"நான் முழுக்க முடிக்கிறதுக்குள்ளே நீங்க வந்துட்டீங்க. "சொன்னா சிரிப்பார். விளையாடறதுக்கு இதுவா நேரம்? எதுக்கு இப்படி எல்லாம் கற்பனையா

பேசறோன்னு கேக்க வந்தேன் சார்"

"டேய்!" என்றுக் கத்தின மாலினி அவன் சட்டையைப் பற்றி உலுக்கி, "யார்கிட்டே வேஷம் போடறே? சொல்டா! எதுக்குடா அக்காவைக் கொன்னே? நான் பார்த்தேன். நான் பார்த்தது உண்மை சொல்லுடா!" என்றாள் ஆவேசமாக.

அவளிடமிருந்து தன்னைப் பிடுங்கிக் கொண்ட சுந்திரா, "மாலினி, உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருச்சா?" நான் இன்ஸ்பெக்டர் போன் செஞ்சதும் தானே புறப்பட்டு வந்தேன்? என் சுதாவை நான் எதுக்காகக் கொலை செய்..." வார்த்தை முடியும் முன் அறை வாங்கினான்.

"ராஸ்கல்! திட்டம் போட்டா கொலை செய்யறே? ஆபீஸ்லேருந்து வந்து கொன்னுட்டு மறுபடி ஆபீசுக்குப் போயிட்டா மாட்டிக்க மாட்டோம்னு நினைப்பா?" என்றார் ஜெயச்சந்திரன்.

"இன்ஸ்பெக்டர், நீங்க அநாவசியமா என்னை அடிக்கறீங்க. அநாவசியமா என்னை சந்தேகப்படறீங்க. மாலினி ஏன் பொய் சொல்றான்னு எனக்குப் புரியலை. அவ சொல்றதை வெச்சு நீங்க முடிவுக்கு வராதீங்க. நான் சந்தேகப்படறது தனசேகரை!"

"அப்படியா? உன் சந்தேகத்தை எல்லாம் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லு!" என்று ஜெயச்சந்திரன் அவன் கழுத்தில் கை வைத்து வாசலை நோக்கித் தள்ளினார்.

"திஸ் ஈஸ் டூ மச்! நானே என் வைஃப் செத்துப் போன துக்கத்தில இருக்கேன். என்னைப் போய்..."

அவன் முகத்தில் குத்தினார் ஜெயச்சந்திரன்.

"வாய் பேசாம ஜீப்புல ஏறி உட்காருடா மாப்பிள்ளை"

"சார், எனக்கு ஒரு வக்கீலோட பேசணும்."

"போடான்னா..." மறுபடி குத்தினார் ஜெயச்சந்திரன்.



## 11



இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன் தனசேகரனின் வீட்டிற்கு வந்த போது இரவு மணி இரண்டு. கதவைத் தட்டினார்.

உள்ளே விளக்கெரிந்து, கதவு திறந்து கண்களைக் குறுக்கிப் பார்த்தான் தனசேகர், "யாரு?"

"ஆமாம் சார், என்ன விஷயமா இந்த நேரத்தில?"

"சொல்றேன். இவங்க யாரு?"

"என்னோட ஃப்ரெண்ட்ஸ். ஏர்போர்ட் போயிருந்தேன். சிங்கப்பூருக்கு டூர் போயிட்டு ஃப்ளைட்ல திரும்பின இவங்களை யதேச்சையா பார்த்தேன். லாட்ஜுக்குப் போறதா சொன்னாங்க. வேணாம்னு இங்கே அழைச்சுட்டு வந்தேன்"

ஜெயச்சந்திரன் விழிகளை ஓட்ட அங்கே ஓரத்தில் இருந்த எட்டு பெரிய சூட்கேஸ்களிலும், பேக்களிலும் விமானங்கள் கட்டிய டேக் தொங்கியது.

"எத்தனை மணிக்கு நீங்க ஏர்போர்ட்டுக்குப் புறப்பட்டீங்க?"

"எட்டரைக்கெல்லாம் புறப்பட்டு ஒம்பதே காலுக்குப் போனேன்"

"இவங்களை சந்திச்சது எத்தனை மணிக்கு?"

"போய் பத்து நிமிஷத்தில பார்த்தேன்"

"அவங்களை எழுப்புங்க. அவங்க பாஸ்போர்ட் ஏர் டிக்கெட் எல்லாம் நான் பார்க்கணும்"

தனசேகர் அவர்களை எழுப்பினான். பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்தினான். அவர்கள் காட்டிய பாஸ்போர்ட்ஸ், டிக்கெட்ஸ் சரியாக இருந்தது. விசாரித்ததில் இவன் சொன்ன தகவல்களை

உறுதிப்படுத்தினார்கள்.

"தனசேகர், நீங்க எதுக்காக ஏர்போர்ட் போனீங்க"

"என்னோட பழைய முதலாளி சுதந்திரா எனக்கு வேலை வாங்கித் தர்றேன்னு சொல்லி அங்கே வரச் சொன்னார். ஆனா அவர் வரலை. ஒன்பதரைக்கு நான் அங்கே இருக்கணும்ன்னு சொன்னார். நாங்க மூணு பேருமே பதினோரு மணி வரைக்கும் அவருக்காகக் காத்திருந்துவிட்டு அப்புறம் தான் திரும்பி வந்தோம்"

"சுதந்திரா எப்போ உங்ககிட்டே சொன்னாரு?"

"நேத்து" என்று நேற்று சுதந்திரா திடீரென்று வந்ததை, பேசியதை, நான் அவர் மனைவியிடம் தப்பாகப் பேசியதை, அதற்காக அடி வாங்கி வேலையும் இழந்ததை எல்லாம் சொன்ன தனசேகர். "சார், என்னால நம்பவே முடியலை. அந்தாள் அப்படி எல்லாம் இரக்கப் படற ரகம் இல்லை ஏதோ ஒரு உள்நோக்கத்தோடத்தான் வந்துட்டுப் போய் என்னை ஏர்போர்ட்ல முட்டாள் மாதிரி காத்திருக்க வெச்சிருக்கணும். இதை ஏன் சொல்றேன்னா வந்ததும் சிகரெட் வாங்க சில்லரை தேடி டிராயர்ல கலைச்சப்போ ஒரு லெட்டர் கிடைச்சது. சுதந்திரா வைஃப் எனக்கு எழுதற மாதிரி ஒரு லெட்டர். சத்தியமா அந்த அளவு எங்க பழக்கம் கிடையாது. நான் அம்மா சபலப்பட்டுப் பேசிப்பார்த்ததோட சரி. இந்த லெட்டரை நேத்து வந்தப்போ ஏதோ காரணத்தோட சுதந்திரா தான் என் டிராயருக்குள்ளே வெச்சிருக்கணும்'' என்றான் தனசேகர்.

"என்ன லெட்டர் அது?"

தனசேகரிடம் வாங்கிப் படித்துப் பார்த்த ஜெயச்சந்திரனுக்கு எல்லாம் தெளிவாக விளங்கியது.

தான் கொலை செய்து அந்தச் சிக்கலில் தனசேகரை மாட்ட வைப்பதற்காக சுதந்திரா இரக்கப்படுபவன் போல நேற்று வந்து குழைந்து பேசி இதை வைத்து விட்டுப் போயிருக்கான். கொலை நடக்கும் போது இவனை ஏர்போர்ட்டுக்கு அனுப்பி அலிபி எதுவும் இல்லாமல் செய்ய நினைத்திருக்கிறான்.



ஆனால் இவனுக்கு அதிர்ஷ்டவசமாக இந்த இரண்டு சாட்சிகள் கிடைத்து விட்டனர்.

அதுமட்டுமில்லாமல் ரொம்ப அப்பாவியாக இந்தக் கடிதத்தை வேறு எடுத்து என்னிடம் கொடுக்கிறான். இவன் கொலைகாரனாக இருந்தால் முதல் காரியமாக இதை எரித்துப் போட்டிருப்பான். சுதா கொலை செய்யப்பட்டதே இவனுக்குத் தெரியவில்லை.

"தனசேகர், சுதா இன்னைக்கு ராத்திரி ஒன்பதரை மணிக்கு கொலை செய்யப்பட்டிருக்காங்க"

"என்னது?'' துல்லியமான, படு உண்மையான அதிர்ச்சி.

"யெஸ்! இந்தக் கொலைல உங்களைச் சிக்க வைக்கத்தான் சுதந்திரா இத்தனை ஏற்பாடுகளும் செய்திருக்கான்."

"கடவுளே சத்தியமா இப்ப நீங்க சொல்லித்தான் எனக்கு விஷயமேத் தெரியும் சார். நான் ஏதோ சபலப்பட்டேன். அவ்வளவு தான். கொலை செய்யற அளவுக்கு துணிச்சல் இல்லை. என்னை சந்தேகப்பட்டுடாதீங்க சார்" பதறினான்.

"இல்லை. எனக்கு உங்க மேலே சந்தேகம் இல்லை. நான் சுதந்திராவை கைது செஞ்சிருக்கேன். நாளைக்கு கோர்ட்ல ஆஜர் படுத்தப் போறேன். அவன் தான் செய்திருக்கான். எனக்குத் தெரியுது. கண்ணால பார்த்த சாட்சியும் இருக்கு. போலீஸ் கஸ்டடில பதினைஞ்சு நாள் வாங்கினா அவனை உண்மையை ஒப்புக்க வெச்சிடுவேன். இந்த கேஸ்ல ப்ராஸிக்யூஷன் தரப்பில் உங்களைச் சேர்த்தாகணும். நீங்க கூப்பிட்டா கோர்ட்டுக்கு வர வேண்டிருக்கும். அப்போ எல்லாத்தையும் சொல்லுங்க. இந்த லெட்டர் விஷயம் ஒன்னைத் தவிர. இது என்கிட்டயே இருக்கட்டும் புரிஞ்சுதா?" என்றார் ஜெயச்சந்திரன்.

- - - -

## 12



சென்னை. மத்திய சிறைச்சாலை.

வாசலில் அந்த டொயாட்டோ கார் வந்து நின்றது. அதில் இருந்து மூன்று ஜூனியர் வக்கீல்கள் புடைசூழ இறங்கினார் கிரிமினல் லாயர் பட்டாபி.

ஒல்லியாக இருந்தார். உயரமாக இருந்தார். லேசான தாடி, அசப்பில் சாருஹாசன், தலையில் வைதீக வழுக்கை. மீசை, தலையில் நரைத்த முடிகளுக்கு டை அடிக்கவில்லை. நெற்றியில் குங்குமம், கழுத்தில் ஒரு உத்திராட்சக் கொட்டை தொங்கியது.

ஜெயிலரை சந்தித்து, பார்மாலிட்டீஸ் முடிந்ததும் 15 நாட்கள் காவல் உத்தரவின் பேரில் விசாரணைக் கைதியாக உள்ளே அனுமதிக்கப்பட்டிருந்த சுதந்திராவை அழைத்து வந்தார்கள்.

சுதந்திராவை இவர்கள் சந்தித்ததும், பட்டாபி தன் ஜூனியரிடம் கை நீட்டி அவர் மடித்துத் தயாராகக் கொடுத்த வெற்றிலையை வாயிடுக்கில் நுழைத்துக் கொண்டு, "இதோ பாரு, உன்னை கஷ்டப்பட்டு கோர்ட்ல கஸ்டடி வாங்கி அடி, உதையிலேர்ந்து காப்பாத்தி இங்கே கொண்டு வர்றதுக்குள்ளே எவ்வளவு பாடுபட்டேன்னு உனக்கேத் தெரியும். பாய்ண்ட் பாய்ண்ட்டாகப் பேசலாமா?" என்றார்.

தலையசைத்தான் சுதந்திரா மௌனமாக.

"நான் உன் லாயர். உனக்காக வாதாடப் போறவன். என்கிட்டே பொய் ஆகாது. எனக்குத் தெரியும். உன் பொண்டாட்டியை நீ தான் கொலை செஞ்சே"

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"போலீஸ் ஒண்ணும் உன் மேலே பொய் வழக்கு ஜோடிக்கவில்லை. அது ஐட்டுகிட்டே நான் பேசிப்



...தும். நிஜம் உன் கண்ல இருக்குடா தம்பி. எத்தனை கண்ணுல பார்த்திருக்கேன்! சொல்லு, ...ல்ல ஏன் கொன்னே?"

தயங்கி எச்சில் விழுங்கினான் சுதந்திரா.

"டாக்டர்கிட்டே உம்முன்னு உக்காந்துட்டா அவர் எப்படி வைத்தியம் பண்ணுவார்? என்னை நம்பணும் நீ. என்னையும் நம்பலைன்னா உன்னை யாரும் காப்பாத்த முடியாது. அழகா இருக்காளேப்பா சுதா! ஏன் கொன்னே?"

"மலேஷியால நான் வேலை பார்த்தப்போ அங்கேயிருந்து ஒரு பொண்ணோட பழகினேன். எனக்கு கல்யாணம் ஆனதை மறைச்சேன். ரொம்ப நெருங்கிப் பழகினேன். அவ பெரிய பணக்காரி. நான் இந்தியா போய்ட்டு ரெண்டு வருஷம் கழிச்சு மறுபடி மலேஷியா வந்து அவளை கல்யாணம் செய்துக்கறதா சொன்னேன். அவ எனக்கு சிடிஸன்ஷிப் வாங்கித் தர்றதாவும், நான் வர்ற வரைக்கும் காத்திருக்கிறதாகவும் சொல்லியிருக்கா. அவளோட நினைப்புதான் எனக்குள்ளே அதிகம். என் எதிர்காலத்துக்கு சுதா தடை. அதனால அவளை அழிக்க நினைச்சேன், ஆனா என் உண்மை தெரியாம சந்தோஷமான கணவனாக நடந்துக்கிட்டேன். யதேச்சையா ரணசேகர் அவளை ஃபாலோ பண்ணின சம்பவம் நடந்தது. அதோட அடிப்படையிலே படிப்படியா திட்டம் போட்டேன்."

சுதந்திரா தான் போட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்லி, " ஆனா யதேச்சையா மாலினி என்னைப் பார்த்துத் தொலைச்சுட்டா. மாட்டிக்கிட்டேன்" என்றான்.

சில விநாடிகள் மௌனமாக இருந்த பட்டாபி, "உன் [illegible] மாலினிக்கும் உனக்கும் ஏதாவது தகராறு இருந்துச்சுன்னா எப்பயாவது? நல்லா யோசனை செஞ்சு சொல்லு" என்றார்.

"ஒரு தடவை... ஆனா அதை சொல்லவே வெக்கமா இருக்கு"

"பரவாயில்லை. சொல்லு. எனக்கு உபயோகப்படலாம்."

"ஒரு தடவை சுதா ஊர்ல இல்லை. அப்போ என் வீட்ல மாலினி தங்கியிருந்தா. அவ குளிச்சிட்டு டவல் மட்டும் கட்டிட்டு வந்தப்போ யதேச்சையா நான் எதிரே போய் முட்டிக்கிட்டேன். அவளை கவர்ச்சியா பார்த்த விநாடியில உள்ளே புத்தி தடுமாறி திடீர்னு அவளைக் கட்டிப்பிடிச்சி கன்னத்தில் முத்தம் கொடுத்துட்டேன்."

"பெரிய வீரனா இருப்பே போலிருக்கே? அப்புறம்"

"அவ பளார்னு என்னை அறைஞ்சுட்டா. இன்னொரு தடவை இப்படி நினைப்பு வச்சுக்கிட்டா அக்காக்கிட்டே சொல்லிடுவேன்னு கத்தினா. நான் நூறு தடவை ஸாரி ஸாரின்னு கெஞ்சினேன்."

"அப்புறம், இன்னும் ஏதாவது பிரச்னை?"

"வேறு ஏதும் பெரிசா இல்லை சார்"

"வெரிகுட். உன் ஆபிஸ்ல நல்லசாமி, அருணகிரி, அப்புறம் சில ஸ்டாஃப் பார்கவி மாமி இவங்க எல்லாம் நமக்குச் சாதகமாக சாட்சி சொல்லுவாங்க. ஆனா ஐ விட்னெஸ் முக்கியமாச்சே மாலினி சாட்சியைத்தான் என்ன பண்றதுன்னு புரியாம முழிச்சேன். இப்போ பாய்ண்ட கிடைச்சிடுச்சு. இப்போ லௌஷீஷம் பேசலாம் கண்ணா. என்னால ஜெயிக்க முடியும்னு தோணினாத்தான் நான் ஒரு கேசைத் தொடுவேன். உன் கேசை தொட்டாச்சு. நிச்சயமா நாம ஜெயிக்கிறோம். சுதந்திரா, நீ சுதந்திரமா வெளியில வர்றே. அதுக்கு நான் கியாரண்டி. எனக்கு வேண்டியது மூணு லட்சம். முடியுமா?"

"நிச்சயம் முடியும் சார். என்னை மட்டும் குற்றவாளி இல்லைன்னு நிரூபிச்சிடுங்க. நீங்க கேட்டதுக்கும் மேலயே தர்றேன்"

"மீட்டருக்கு மேலே கேக்கற ஆட்டோ டிரைவரா நானு? கேட்டதை ஒழுங்கா கொடு. அது போதும். பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் என்னை எப்படிக் கேட்பார், நீ எப்படி சொல்லணும்னு என் ஜூனியர்ஸ் சொல்லித் தருவாங்க. நான் வரட்டுமா? தைரியமா இரு!" அவன் கன்னத்தில் தட்டி புறப்பட்டார் பட்டாபி.

---



## 13



கோர்ட் வளாகத்திற்குள் இருக்கும் அந்த செஷன்ஸ் நீதிபதி வந்ததும் நடந்த நடவடிக்கைகளை எல்லாம் தாண்டி, நேராக நமது சுதா கொலை வழக்கிற்கு வந்தோமென்றால்.....

"யுவர் ஆனர்" என்றார் நெற்றியில் விபூதி வைத்த பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஜெகன். "குற்றம் சாட்டப்பட்டுள்ள சுதந்திராவிற்கு சில மாதங்களாகத் தன் மனைவி சுதா மேல் சந்தேகம். இந்த சந்தேகத்தை தனக்குள்ளேயே வளர்த்துக் கொண்டு அவளை கொலை செய்யத் தீர்மானித்த அவர், இதில் தான் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக சில தகிடுதத்தங்களையும், முன்னேற்பாடுகளையும் செய்திருக்கிறார். ஆனாலும் அவர் கொலை செய்யும் போது சுதாவின் தங்கை மாலினி கொலையைக் கண்ணால் பார்த்து விட்டு போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்க, இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன் உரிய நடவடிக்கைகள் எடுத்து சுதந்திராவைக் கைது செய்துள்ளார். சுதந்திரா தான் இந்தக் கொலையைச் செய்தார் என்பதை தகுந்த சான்றுகள் மற்றும் சாட்சி விசாரணைகளோடு நிரூபிக்க அரசின் தரப்பு தயாராக இருக்கிறது" என்றார்.

டிஃபன்ஸ் லாயர் பட்டாபி எழுந்து,"யுவர் ஆனர், ஐ ஹேவ் ஒன்லி ஒன் வெர்ஷன். திஸ் ஈஸ் ப்யூர்லி எ ஃபேப்ரிகேட்டட் கேஸ். அக்யூஸ்ட் சுதந்திரா குற்றம் செய்யாதவர்னு நான் நிரூபிக்கத் தயார்" என்றார்.

நீதிபதி ஓரமாக கைகட்டி இரண்டு போலீஸ்காரர்களுக்கு நடுவில் நின்ற சுதந்திராவை ஒரு தரம் பார்த்தார்.

"விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தாங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா சுதந்திரா?" என்றார்.

"யுவர் ஆனர், என் மனைவி சுதாவை நான் ரொம்
நேசிச்சேன். நான் அவளை சந்தேகப்படவும் இல்லை
கொலை செய்யவும் இல்லை."

"ஒக்கே, தென் லெட் அஸ் ஸ்டார்ட் வித் ஹிம்
என்றார் நீதிபதி.

விசாரணைக் கூண்டில் சுதந்திரா ஏற்றப்பட்டான்
பார்வையாளர் பகுதியில் மாலினியும், ஓரமாக ஒ
பெஞ்சில் இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரனு
அமர்ந்திருந்தார்கள். ஜெகன் சுதந்திராவை விசாரிக்க
துவங்கினார். பெயர் மற்றும் அவன் செய்யும் தொழி
கல்யாணமான வருடம் போன்ற தகவல் கேள்விகளை
தாண்டியதும்.....

"உங்க மனைவி சுதா மேலே உங்களுக்கு
சந்தேகம் ஏற்பட்டதில்லையா?"

"இல்லை" என்றான் சுதந்திரா.

"நீங்க பக்கத்து வீட்டு மாமியிடம் கோவிலி
சந்தித்துப் பேசியதுண்டா?"

"ஒரு முறை சந்திச்சேன் யதேச்சையா?"

"அப்போ சுதா மேலே எனக்குச் சந்தேகம்
இருக்குன்னு அவங்க கிட்டே நீங்க சொன்னீங்களா?"

"இல்லை, கிடையவே கிடையாது. சம்ம
சந்திச்சப்போ சிரிச்சுக்கிட்டு விலகிட்டோம். நானு
எதுவும் பேசலை. அவங்களும் எதுவும் பேசலை."

"பொய்! யுவர் ஆனர். இவர் தன் மனைவி மே
தனக்கு சந்தேகம் இருப்பதாக பார்கவி மாமியிடம்
சொல்லியிருக்கார். அவர் அதைத் தன் சாட்
விசாரணையில் தெரிவிப்பார். சரி, சம்பவம் நடந்த
அதாவது கொலை நடந்தது எத்தனை மணிக்குன்னு
உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். ராத்திரி ஒன்பதரை மணிக்கு"

"எப்படி தெரியும்?"

"இன்ஸ்பெக்டர் சொன்னார்."

"நீங்க சுதாவோட போனடிச்சப்போ உங்க மச்சினி



மாலினி பார்த்ததை நீங்க கவனிச்சீங்களா?"

"வேடிக்கையா இருக்கு. கொலை நடந்தப்போ நான்
என் ஆபீஸ்ல இருந்தேன்னு சொல்லிருக்கேன். என்
எஸ்டேட்மெண்ட்ல, இன்ஸ்பெக்டர் போன் செஞ்சப்போ
ஆபீஸ்லேர்ந்து பேசிருக்கேன். வீட்டுக்கு அவர்
வரச்சொல்லி வந்து பார்த்தப்போ தான் சுதா கொலை
செய்யப்பட்டதே தெரியும்."

"இன்ஸ்பெக்டர் எத்தனை மணிக்கு உங்களோட
ஆபீஸ் நம்பர்ல பேசினார்?"

"பத்தே கால் இருக்கும்"

"எத்தனை மணியிலேர்ந்து நீங்க ஆபீஸ்ல
இருந்ததா சொல்றீங்க?"

"காலைல பத்து மணியிலேர்ந்து இன்ஸ்பெக்டர்
போன் செஞ்ச ராத்திரி பத்தே கால் மணி வரைக்கும்
நான் ஆபீஸ்லதான் இருந்தேன்"

"நீங்க மட்டும் தான் இருந்தீங்களா?"

"அந்தி மணி வரைக்கும் நானும் மத்த எல்லா
ஸ்டாப்பும் இருந்தோம்"

"அப்புறம்?"

"அஞ்சி மணிக்கப்புறம் என்னோட
அக்கவுண்டண்ட் நல்லசாமி இருந்தார். ரெண்டு பேரும்
தான் கணக்கு டேலி பண்ணிட்டிருந்தோம்"

"இன்ஸ்பெக்டர் போன் செஞ்சப்போ நல்லசாமி
உங்களோட இருந்தாரா?"

இல்லை, அவர் எட்டே முக்காலுக்கு வீட்டுக்குப்
புறப்பட்டுப் போய்ட்டார்"

"அப்போ எட்டே முக்காலுக்கப்புறம் பத்தே கால்
வரைக்கும் நீங்க மட்டும் தனியா உக்காந்து வேலை
பார்த்தீங்க இல்லையா?"

"ஆமாம்"

"நடுவில எங்கேயும் போகலையா?"

"ஒரு தடவை பாத்ரூமுக்குத்தான் போனேன்"

"உங்க ஆபீஸ்லேர்ந்து உங்க வீட்டுக்கு வழக்கமா எதில போவீங்க. வருவீங்க?"

"என்னோட கார்ல"

"எவ்வளவு நேரமாகும் போக?"

"டிராஃபிக்கைப் பொருத்து அது"

"டிராஃபிக் அதிகமா இருந்தா எவ்வளவு நேரமாகும்?"

"முப்பது நிமிஷம் ஆகும்"

"டிராஃபிக் கம்மியா இருந்தா எவ்வளவு நேரமாகும்?"

"இருபத்தஞ்சி நிமிஷம் ஆகும்"

"ஒரு தடவை போய்ட்டு வரணுமின்னா எப்படியு ஒரு மணி நேரம் ஆகும்?"

"ஆமாம்"

"எட்டே முக்காலுக்கும் பத்தே காலுக்கும் நடுவில அந்த ஒரு மணி நேரம் தாராளமா இருக்குதா?"

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஈஸ் ட்ரையிங் டு கன்ஃப்யூஸ் த அக்யூஸ்ட். நடுவில ஒரு மணி நேரம் இருப்பதாலேயே அவர் வந்து கொலை செய்தார் என்றுச் சொல்லிவிட முடியுமா?" என்றார் பட்டாபி.

"யுவர் ஆனர். சுதந்திரா எட்டே முக்காலுக்கு ஆபீசில் இருந்ததை நல்லசாமி சொல்வார். பத்தே காலுக்கு இருந்ததை இன்ஸ்பெக்டரே சொல்வார் நடுவில் ஒன்றரை மணி நேரம் அவர் அங்கே தனியாக இருந்ததை நிரூபிக்க முடியுமா?"

"முடியும். வாட்ச்மேன் அருணகிரி சொல்வார்"

"அருணகிரியின் வாக்குமூலத்தை நண்பர் மறுபடி படிக்க வேண்டும் என்று கோருகிறேன். சுதந்திராவின் கார் காலையிலிருந்து அங்கே இருந்ததை அவர் குறிப்பிட்டிருக்கிறார். பத்து மணிக்கு மேல் அவரை டீ வாங்கி வரச் சொன்னதாக குறிப்பிட்டிருக்கிறார். அவரின்



வாக்குமூலத்தில் எட்டே முக்காலில் இருந்து பத்தே காலுக்குள் சுதந்திராவை அவரின் அலுவலகத்திற்குள் வைத்தும் பார்த்ததாகக் குறிப்பு இல்லை. வாக்குமூலத்தில் குறிப்பிடாத எதையாவது அவர் சாட்சி விசாரணையில் தெரிவிப்பாரென்றால், அதைப் பொய் என்று குறுக்கு விசாரணையில் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் யுவர் ஆனர்"

"தென் அப்ஜெக்ஷன் ஓவர் ரூல்ட் ப்ரொஸீட்" என்றார் நீதிபதி.

மீண்டும் சுதந்திராவிடம் வந்தார் ஜெகன், "உங்களுக்கு தனசேகரைத் தெரியுமா?"

"தெரியும். என் ஆபீஸ்ல வேலை பார்த்தார். அவரோட தவறான நடவடிக்கை காரணமா அவரை வேலையை விட்டு நீக்கிட்டேன்"

"அப்படி என்ன செஞ்சார் அவர்?"

"என் வைஃப் சுதாகிட்ட தப்பாப் பேசினதோட அவளைப் பத்தி ஆபீஸ்ல மத்தவங்ககிட்ட தப்பாப் பேசினார்."

"உங்க மனைவிகிட்டே அவர் என்ன தப்பாப் பேசினார்?"

தயங்கினான் சுதந்திரா.

"இங்கே நீங்க சொல்லித்தான் ஆகணும். சொல்லுங்க."

"அடுத்த வாரம் முதலாளி ஊருக்குப் போறார். அப்போ துணைக்கு நான் வந்து இருக்கட்டுமான்னு கேட்டான்."

"இது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என் வைஃப் சுதா சொன்னா"

"சரி. ஆபீஸ்ல என்ன தப்பாப் பேசினார் தனசேகர்?"

"நான் வெளிநாடு போயிருந்தப்போ என் மனைவி ஒழுங்கா இருந்திருக்க முடியாதுன்னும், அவ ஒரு மாதிரி பார்க்கிறதாகவும் சில ஸ்டாஃப்கிட்டே அவன்

சொல்லியிருக்கான்."

"இது எப்படி தெரிஞ்சது?"

"ப்யூன் தங்கப்பனை விசாரிச்சப்போ சொன்னான்"

"தனசேகர் ஆபீஸ்ல சொன்ன விஷயங்கள் பத்தி உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டதா?"

"இல்லை"

"காரணமில்லாம தனசேகர் ஏன் அப்படிச் சொல்லணும். ஒரு வேளை சுதா ஏதாச்சும் செய்திருக்கலாமோன்னு கொஞ்சம் ஒரு துளியளவு கூட சந்தேகக் கேள்வி உங்க மனசில வந்து போகலையா?"

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். சந்தேகப்படவில்லை என்று என் கட்சிக்காரர் தெளிவாகச் சொல்லிவிட்டார். அதன் பிறகும் பப்ளிக் ப்ராசிகியூட்டர் தான் விரும்பும் ஒரு பதிலை அவரை சொல்ல வைக்க வற்புறுத்தும் கேள்விகளைக் கேட்டுக் குழப்புகிறார்" என்றார் பட்டாபி.

"நேரடியான கேள்விகளை மட்டும் கேளுங்கள்" என்றார் நீதிபதி.

"யுவர் ஆனர். நாம் எல்லோருமே மனிதப் பிறவிகள். சந்தேகப்படுவது மனித நோய். எதையும், யாரையும், கொஞ்சமாவது என்மேல் பாசம் இருக்கா? என்று பெற்ற அம்மாவையே நாம் சந்தேகத்தோடு கேட்பதுண்டா இல்லையா? இளம் வயது அழகான மனைவி பற்றி ஒருவன் தப்பாகப் பேசினால் கோபம் வரும். அதே சமயத்தில் லேசான சந்தேகம் எட்டிப் பார்க்காமல் இருக்க வாய்ப்பில்லை. சந்தேகம் ஏற்பட்டு அதை நம்பிக்கை என்பது விழுங்கியிருக்கலாம். சந்தேகமே இல்லை என்றால் அது மிகையான ஸ்டேட்மெண்ட்"

"வாட் டு யூ வாண்ட டு ஸ்ட்ரெஸ் மிஸ்டர் ப்ராஸிகியூட்டர்?"

"சுதந்திராவுக்குத் தன் மனைவியின் நடத்தையின் மேல் சந்தேகம் ஏற்பட்டு அது வளர்ந்து கொலையில் முடிந்தது என்பது தானே என் கட்சியின் அடிப்படை வாதம்!"



பட்டாபி மீண்டும் எழுந்து, "அதைத்தான் நான் மீண்டும் மறுக்கிறேன். சட்டத்தில் யூகங்களுக்கு இடமில்லை. மனதில் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம் என்று யூகம் சொல்வதாய் இருந்தால் நாம் வாதங்களைத் தொடராமல் மரத்தடி கிளி ஜோசியரிடம் போய் சுதந்திரா குற்றவாளியா இல்லையா என்றுக் கேட்டுத் தீர்மானிக்க வேண்டியது தான். அவர் தன் மனைவியை சந்தேகப்பட்டார் என்பதற்கு மெடீரியல் எவிடன்ஸ் ஏதாவது உண்டா?"

"இல்லை.. ஆனால் சாட்சி உண்டு. பார்கவி மாமி"

"பார்கவி மாமியை விசாரிக்கும் போது அந்த சாட்சியின் தரம் பற்றி நான் நீதிபதி அவர்களுக்கு உணர்த்துகிறேன்" என்று அமர்ந்தார் பட்டாபி.

மீண்டும் சுதந்திராவிடம் வந்த ஜெகன், "ஆபீஸ்ல இருந்ததா சொல்ற நீங்க அதை உங்க மனைவிக்கு முன்கூட்டி தெரிவிச்சீங்களோ?"

"ஒன்பதே காலுக்கு நான் பக்கத்து வீட்டு பார்கவி மாமிக்கு போன் செஞ்ச நான் வர பனிரெண்டரை ஆகும்னு சுதாகிட்டே சொல்லச் சொன்னேன்"

"போன் செய்ய சரியா ஒரு ரூபா சில்லறை வெச்சிருந்தீங்களா இல்லை பக்கத்திலே கடையில மாத்தினீங்களா? ஞாபகம் பண்ணிச் சொல்லுங்க."

"என்கிட்டேயே...." என்றவன் நிறுத்தினான்.

"கமான். உங்ககிட்டேயே...."

"என்கிட்டேயே போன் இருக்கறப்ப எதுக்கு காசு, பப்ளிக் பூத்ல பேசறதா இருந்தாத்தானே காசு தேவைப்படும்?"

"நான் சொல்றேன். உங்க வீட்டுக்கு எதிர்லயே இருக்கிற பப்ளிக் பூத்லேர்ந்து மாமிக்கு போன் செஞ்சீங்க."

"இல்லை என் ஆபீஸ்லேர்ந்து தான் செஞ்சேன்"

"நீங்க ஆபீஸ்லேர்ந்து செஞ்சப்போ நல்லசாமி கூட இருந்தாரா?"

"இல்லை"

"ஆபீஸ்லேர்ந்து தான் செஞ்சீங்கன்னு உங்களால நிரூபிக்க முடியுமா?"

"ஆபீஸ்லேர்ந்து செய்யலைன்னு உங்களால நிரூபிக்க முடியுமா?" என்று திருப்பிக் கேட்டாள் சுதந்திரா.

"அதான் வேணும். நோட் திஸ் யுவர் ஆனர். நான் ஆபீஸ்லேர்ந்து பண்ணலை. ஆனா உங்களால அதை நிரூபிக்க முடியாது. இதானே இவர் சொன்னதுக்கு அர்த்தம்?"

"ஐ ஹேவ் டு அப்ஜெக்ட் யுவர் ஆனர். இதுக்குப் பேரு இண்டர்பிரட்டேஷன். நம் சௌகரியத்துக்கு அர்த்தம் எடுத்துக்கிட்டா எப்படி? கடவுள் இல்லைன்னு நினைக்கிறவன் நான்னு வெச்சுக்கலாம். ஒரு பக்திமான் கிட்டே கடவுள் இருக்கார்னு நிரூபி பார்க்கலாம்னு கேட்டா என்ன அர்த்தம்? நான் கடவுள் இருக்கார்னு ஒத்துக்கிட்டதா அர்த்தமா? இல்லாத ஒண்ணை உன்னால நிரூபிக்க முடியாதுப்பான்னு என்னோட நம்பிக்கையின் அடிப்படையில் சேலஞ்ஜ் பண்றதா அர்த்தம். அந்த மாதிரித்தான் என் கட்சிக்காரர் சொன்னதும்"

"திஸ் எக்ஸ்ப்ளனேஷன் ஈஸ் கொய்ட் லாஜிகல் ப்ராஸிக்யூட்டர். தி அப்ஜெக்‌ஷன் ஈஸ் சஸ்டெய்ண்ட். மேற்கொண்டு கேளுங்கள்" என்றார் நீதிபதி.

பெருமூச்சுவிட்ட ஜெகன், "சுதந்திரா, சரி நீங்க போன் செஞ்சீங்க பார்கவி மாமிக்கு. எத்தனை மணிக்குன்னு சொன்னீங்க?"

"ஒன்பதே கால்"

"ஏன் குறிப்பா அந்த நேரத்தை ஞாபகத்தில வெச்சிருக்கீங்க?"

"போன் என் வீட்ல இல்லை. அடுத்த வீட்ல தொந்தரவு பண்றப்போ இந்த நேரத்தில தொந்தரவு பண்ணலாமான்னு பார்த்து தான் செய்வேன். அதனால மணி பார்த்துட்டு இன்னும் மாமி தூங்கியிருக்க



மாட்டாங்கன்னு போன் செஞ்சேன். அதனால மனசுல பதிஞ்சிடுச்சு."

"நீங்க சொல்லச் சொன்னீங்க சரி. மாமி அந்த தகவலை சுதாகிட்ட சொன்னாங்களா?"

"ம். சொன்னாங்க"

"எப்படி உங்களுக்குத் தெரியும் அது?"

விழித்தாள் சுதந்திரா. தவறி விட்டோம் என்று புரிந்தது.

"சொல்லுங்க. எப்படித் தெரியும்? அவங்க போய் சொன்னதை நீங்க கண்ணால பார்த்தீங்களா?"

"இல்லை. அதெப்படி பார்க்க முடியும்?"

"பின்னே எப்படி தெரியும்? நீங்க வந்தப்போ சுதா பிணமாயிட்டா. அங்கேர்ந்து இன்ஸ்பெக்டர் அரெஸ்ட் பண்ணிட்டார். ஜெயிலுக்குப் போயிட்டு இப்பதான் விசாரணைக்கு வந்தீங்க. நடுவில மாமியைப் பார்த்து கேட்டீங்களா?"

"இல்லை. அவங்க சொல்லியிருப்பாங்கன்னு நினைச்சேன்."

"யுவர் ஆனர், ப்ளீஸ் நோட் திஸ். முதலில் சொன்னாங்க என்ற இவர் இப்போது சொல்லியிருப்பாங்கன்னு என்கிறார். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் அதிகம்."

நீதிபதி குறித்துக் கொள்ள, பட்டாபி சுதந்திராவை ஒரு முறை முறைத்த தன் ஜூனியரிடம், "சொதப்பிட்டாள்" என்றார்.

"மிஸ்டர் பட்டாபி, இதில நீங்க ஏதாவது சொல்றீங்களா?"

"என் கட்சிக்காரருக்கு டங்க் ஸ்லிப்! இது எல்லோருக்கும் சகஜமாக ஏற்படுவது தான். அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை."

"அதெப்படி நண்பரே! நம் சௌகரியத்துக்கு எடுத்துக்கறதா, அவர் இந்த கொலையை செய்யலைன்னு சொல்றதையும் டங்க் ஸ்லிப்னு எடுத்துக்க முடியுமா? தட்ஸ் ஆல் யுவர் ஆனர்" என்றமர்ந்தார் ஜெகன்.

- - - - - - -



# 14

பார்கவி மாமி விசாரணைக் கூண்டுக்குள் சற்றே நடுக்கத்துடன் நின்று கொண்டிருக்க, பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஜெகன் அவரிடம் வந்தார்.

"உங்களுக்கு சுதந்திரா-சுதா தம்பதியை எத்தனை நாளாத் தெரியும்?"

"அவங்க அந்த வீட்டுக்குக் குடி வந்ததிலேர்ந்து தெரியும்"

"சுதா உங்களோட பிரியமாப் பழகினாளா?"

"மாமி, மாமின்னு ரொம்பப் பிரியமாப் பழகினா."

"சுதா பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?"

"ரொம்ப நல்லப் பொண்ணாதான் இருந்தா. சிரிச்சுப் பேசுவா. அன்பு காட்டுவா. சமீப காலமாத்தான் அவளோட நடவடிக்கைகள் எனக்கு பிடிக்கலை."

"அப்படி என்ன செஞ்சாங்க?"

"சுதாவோட கேரக்டர் சரியில்லைங்க. தன் புருஷனுக்கு துரோகம் செய்யறான்னு நான் சந்தேகப்பட்டேன். அதே சந்தேகத்தை அவ புருஷன் சுதந்திராவும் என்கிட்டே சொன்னார்."

"முதல்ல நீங்க எதனால சந்தேகப்பட்டீங்கன்னு சொல்லுங்க?"

பார்கவி மாமி டெலிபோன் சம்பவத்தையும், இரவில் ஒரு உருவம் காம்பௌண்ட் தாண்டிக் குதித்ததையும் விவரித்தாள்.

"யுவர் ஆனர். இவரின் வீடும், சுதந்திராவின் வீடும் அடுத்தடுத்த வீடுகள். சுதந்திராவின் வீட்டுக்கு வலதுபுறம் இவர் வீடு. இடதுபுறம் காலி மனை. பின்புறம் காலிமனை. இரண்டு வீடுகளின் அமைப்பை விளக்கும் சில புகைப்படங்களை ஒரு மெட்டீரியல்



எவிடென்ஸாகச் சேர்த்துள்ளோம். அதை கனம் நீதிபதி அவர்கள் பார்க்க கோருகிறேன்."

கிளார்க் எடுத்துக் கொடுக்க, நீதிபதி அந்த வர்ணப் புகைப்படங்களை பார்த்தார். சுதந்திராவின் வீடு நான்கு திசைகளில் இருந்தும் எடுக்கப்பட்டிருந்தது. எது சுதந்திராவின் வீடு, எது மாமியின் வீடு என்று அம்புக்குறி போட்டு எழுதப்பட்டிருந்தது.

"இப்போது இவர் சொன்ன சம்பவத்தை யோசித்துப் பாருங்கள். இரவில் யாருக்கும் தெரியாமல் சுதாவின் வீட்டிற்கு வர நினைக்கும் ஒரு நபர் பாதுகாப்பான மற்ற மூன்று பகுதிகளைத் தேர்ந்தெடுத்திருப்பானா அல்லது, வரிசையாக தொட்டிகள் வைக்கப்பட்ட பாதுகாப்பற்ற, பலர் பார்த்து விடக்கூடிய இவர் வீட்டு காம்பௌண்ட் வழியைத் தேர்ந்தெடுப்பானா?" என்றார் ஜெகன்.

"என்ன சொல்ல வருகிறீர்கள்?" என்றார் நீதிபதி.

"அதுவும் சரியாக இவர் படுத்திருக்கும் இடத்தின் அருகில் இவர் பார்வையில் படும்படியான சுவரேறி குதித்திருக்கிறான். [illegible] விழிக்க வைப்பதற்காகவே தொட்டிகளை [illegible] விட்டிருக்கிறான். இதெல்லாம் இவரின் மனதில் ஒரு சந்தேகத்தை விதைப்பதற்காக சுதந்திராவே செய்த ஏற்பாடுகள்."

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். பக்கத்து வீட்டு நபர் மனதில் தன் மனைவி பற்றி சந்தேகம் ஏற்படுவதால் என் கட்சிக்காரருக்கு என்ன லாபம்?" என்று எழுந்தார் பட்டாபி.

"இருக்கிறது யுவர் ஆனர். சுதந்திராவுக்கு தன் மனைவியைக் கொலை செய்வது மட்டுமில்லை நோக்கம். அந்தக் கொலைப் பழியை வேறு ஒருவர் மேல் சுமத்தவும் நினைத்தார். ஆபீஸ் ஸ்டாப் தனசேகர் தோதாக மாட்டுவார். அவருக்கும் தன் மனைவிக்கும் தொடர்பு இருப்பதாக மற்றவர்களை நம்ப வைக்க நினைத்து, முதல் கட்டமாக இவரைத் தேர்ந்தெடுத்தார். டெலிபோனில் வேண்டுமென்றே குரல் மாற்றி தனசேகர் என்று சொல்லி ஆனால், தன் மனைவியிடம் இயல்பாகப் பேசிவிட்டு, பிறகு மறுபடி போன் செய்து இப்போது தான் போன் செய்வதாகச்

சொல்லியுள்ளார். நினைத்தபடி பார்கவி மாமி மனதில் சந்தேக நெருப்பு விழுந்தது. அதை விசிறும் இரண்டாம் கட்டமாக சுவரேறி குதித்த நாடகம். மூன்றாவது கட்டமாக கோவிலில் சந்தித்து தனக்கே தன் மனைவிமேல் சந்தேகம் இருப்பதாகப் பிரதாபமாகச் சொல்லியுள்ளார். சம்பவ தினத்திற்கு முதல்நாள் தனசேகரைச் சந்தித்துப் பேசி பொய் காரணம் சொல்லி அவரை மறுநாள் திட்டமிட்ட நேரத்தில் வெளியே புறப்பட வைத்து... அலுவலகத்தில் வேலை இருப்பதாக எல்லோரிடமும் பாவ்லா செய்து, நடுவில் ஒரு மணி நேரத்தில் வீட்டிற்கு வந்து கொலை செய்து விட்டு மறுபடி திரும்பி ஆபீசுக்குப் போய்விட்டார். இதில் அவர் எதிர்பார்க்காத இரண்டு சம்பவங்கள் நடந்து விட்டன. ஒன்று, பழி விழ வைக்க தனசேகர் குற்றம் நிகழ்ந்த போது ஏர்போர்ட்டில் இருந்ததற்கு சரியான அலிபி வைத்திருப்பது, இரண்டு கொலையை மாலினி கண்ணால் பார்த்து விட்டது."

"குறிக்கிடுவதற்கு மன்னிக்கணும் யுவர் ஆனர். நண்பர் இப்படி இருக்கலாம் என்று தான் நினைப்பதை எல்லாம் சொல்வதில் அர்த்தம் இல்லை. நிரூபிக்க வேண்டும். அவரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் எனக்கு ஆதாரம் தேவை. பார்கவி மாமியிடம் இரண்டு விதமாக போனில் பேசி சந்தேகத்தை விதைத்தவர் சுதந்திரா என்பதற்கு ஆதாரம் உண்டா? சுவரேறி அவரே குதித்தாகவோ அல்லது ஆள் வைத்து நடத்தியதாகவோ நிரூபிக்கப் போகிறாரா நண்பர்?"

"மிஸ்டர் பிராசிகியூட்டர், சாட்சி விசாரணையின் மூலமாக நீங்கள் ஸ்தாபிக்க விரும்புவதை ஸ்தாபியுங்கள்" என்றார் நீதிபதி.

"கோயில்ல சந்திச்சதா சொன்னீங்களே, அப்போ சுதந்திரா உங்ககிட்டே என்ன சொன்னார்?"

"உங்களை என் அம்மா மாதிரி நினைச்சு என் கவலையை சொல்றேன். சுதா மேல எனக்கு சந்தேகமா இருக்கு. அவ எனக்கு துரோகம் செய்யறாளோன்னு நினைக்கிறேன்னு சொன்னார்."

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"



"எனக்கும் சமீபத்தில் கொஞ்சம் சந்தேகமாத்தான் இருக்கு. மனசு விட்டுப் பேசு தம்பின்னு சொன்னேன். அப்படித்தான் பேசப்போறேன். ஒத்து வரலைன்னா டைவர்ஸ் செய்ய வேண்டியதுதான்னு சொன்னார்."

"சரி, சம்பவம் நடந்த அன்னைக்கு சுதாவுக்கு தகவல் சொல்லச் சொல்லி உங்களுக்கு சுதந்திரா போன் செஞ்சாரா?"

"ஆமாம்"

"அப்போ எத்தனை மணி இருக்கும்?"

"ஒன்பதே கால் சார்"

"எப்படி சரியாச் சொல்றீங்க"

"போன்ல அவர் இந்த ராத்திரி பத்து மணில உங்களை தொந்தரவு செய்ய வேண்டியதா இருக்குன்னு சொன்னார். பத்து மணியா ஆயிடுச்சான்னு நான் கெடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்பதே கால்."

"யுவர் ஆனர், ப்ளீஸ் நோட் திஸ் பாய்ண்ட்! சுதந்திரா அபாரமான கிரிமினல் பிரைன் உள்ளவர். இவர் மனதில் போன் வந்த நேரத்தைப் பதிய வைப்பதற்காகவே பத்து மணி என்று பொய் சொல்லியுள்ளார். சுதந்திரா தன் விசாரணையில் இரவு நேரம் தொந்தரவு செய்கிறோமே என்று நேரம் பார்த்துக் கொண்டு போன் செய்ததை குறிப்பிட்டுள்ளதை மறக்க வேண்டாம். இரண்டுக்கும் உள்ள முரண்பாட்டைப் பாருங்கள். ஒன்பதே கால் என்று கெடிகாரத்தில் பார்க்கும் ஒருவர் போனில் பத்து மணி என்று அபத்தமாகச் சொல்வாரா?"

பட்டாபி எழுந்து சிரித்து. "ஒவ்வொரு வார்த்தைக்கும் புதை பொருள் ஆராய்ச்சி நடத்தினால் எப்படி? சாதாரணமாக நாம் பேச்சு வழக்கில் என்ன சொல்கிறோம்? நேற்று மாலை ஆறு, ஆறரை இருக்கும், என் மாமா ஊரிலிருந்து வந்தார் என்று சொல்கிறோமோ இல்லையா, அந்த மாதிரி தான் சுதந்திரா மாமியிடம் சொன்னதும்" என்றார்.

"நடந்து முடிந்த நிகழ்ச்சியை மறுநாள் சொல்லும்

போது அப்படி சொல்லலாம். நேரம் பார்த்துவிட்டு உடனே பேசும் போது குத்து மதிப்பாகச் பேசுவோமா? தட்ஸ் ஆல் யுவர் ஆனர்." என்று அமர்ந்தார்.

"மிஸ்டர் பட்டாபி. நீங்கள் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யலாம்."

பட்டாபி அருகில் வந்து நின்றார்.

"போன்ல தனசேகர்னு குறிப்பிட்டதாகச் சொன்னீங்க. அப்புறம் சுதந்திரா பேசினதா சொன்னீங்க. தனசேகர்னு சொன்ன குரல் சுதந்திராவோட குரலா?"

"இல்லை, வேற குரல்"

"வெரிகுட். காம்பௌண்ட் வழியா குதிச்ச உருவம் சுதந்திரா மாதிரி இருந்ததா?"

"இல்லை"

"கோயில்ல சந்திச்சீங்க சரி. ஆனா எதுவும் பேசலை. பேசினதா சொல்லப் சொல்லி போலீஸ் உங்களை வற்புறுத்தினாங்க அதானே உண்மை?"

"இல்லைங்க. நிஜமாகவே நாங்க பேசினோம்"

"அதுக்கு முன்னாடி சுதந்திரா வேற எப்போதவது மனம்விட்டு உங்க கூட பேசிருக்காரா?"

"இல்லை"

"நீங்க உங்க அந்தரங்கமான பிரச்சினையை அவர்கிட்ட பேசிருக்கீங்களா?"

"இல்லை"

"யுவர் ஆனர். இவரோ பக்கத்து வீட்டுக்காரர். அவ்வப்போது சந்திக்கும் போது , சிரிக்கும் அளவு மட்டுமே சுதந்திராவுக்கு பழக்கமும், அறிமுகமும், அப்படியிருக்க, அவர் இவரிடம் மனைவியை சந்தேகப்படுவதாக சொன்னாரென்பதை நம்ப முடிகிறதா? மனைவியை சந்தேகப்படுவது எவ்வளவு பெரிய அந்தரங்கமான விஷயம்! அதை மூன்றாம் நபரிடம் சொல்ல அவருக்கென்ன பைத்தியமா?"

"யுவர் ஆனர்" என்று எழுந்தார் ஜெகன், "அது தான் சுதந்திராவின் சாமர்த்தியம் என்று நான் சொல்கிறேன்"

"மனைவியை கொலை செய்யத் திட்டம்



வைத்திருக்கும் இவன் இப்படி பக்கத்து வீட்டுக்காரிடம் சொல்வானா? பைத்தியக்காரத் தனமாக இல்லை"

"பிராஸிக்யூட்டர், டிஃபன்ஸ் லாயர் சொல்வதில் சென்ஸ் இருக்கிறதே. மனைவியை சந்தேகப் பட்டது தான் கொலைக்கு மோடிவாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். திட்டம் போட்டு செயல்படும் சாமார்த்தியசாலி என்று சுதந்திராவை வர்ணிக்கிறீர்கள். அப்படிப்பட்டவர் சந்தேகப்படுவது பக்கத்து வீட்டுக்காரப் பெண்ணிடம், அதுவும் அதிக அறிமுகமில்லாதவரிடம் சொல்வாரா என்ன?" என்றார் நீதிபதி.

ஜெகன் பதில் இல்லாமல் தவிக்க,"தேங்க் யூ யுவர் ஆனர்" என்று அமர்ந்தார் பட்டாபி சற்றேப் பெருமிதத்துடன்.

## 15



அடுத்து தனசேகரை விசாரித்த போதும் பட்டாபி இந்தக் கோணத்தில் கேள்வி கேட்டார்.

"யுவர் ஆனர். தனசேகருக்கு சுதந்திரா மேல் பரிபூரண கோபம் இருக்க சாத்தியம் இருக்கிறது. அலுவலகத்தில் அத்தனை பேர் முன்பாக அடி வாங்கி, வேலையும் இழந்திருக்கிறார். அப்படியிருக்க, இந்த வழக்கில் சுதந்திரா கைது செய்யப்பட்டதும், அவரைப் பழி வாங்கும் உணர்வோடு அவர் பொய் சாட்சி சொல்கிறார் என்று குற்றம் சாட்ட இடம் இருக்கிறது. சுதந்திரா இவரைத் தேடி வந்தாராம். இரக்கப்பட்டாராம் வேலை வாங்கித் தருவதாச் சொன்னாராம். அதற்காக மறுநாள் ஏர்போர்ட் வந்து காத்திருக்கச்சொன்னாராம். எதையாவது நம்ப முடிகிறதா? தன் மனைவியைப் பற்றிக் கேவலமாகப் பேசியவனை, ஆபீஸில் அடித்து வேலையை விட்டு நீக்கி வாட்டியவனை எவனாவது தேடிப் போவானா?

இரக்கம் காட்டுவானா? பொருந்துகிறதா?"

ஜெகன் எழுந்து, "தனசேகர் மேல் பழி விழ வேண்டும் என்பதற்காக இயல்புக்கு விரோதமாக சுதந்திரா செயல்பட்டார் என்பதே என் வாதம்" என்றார்.

"யுவர் ஆனர். இந்த வழக்கில் தனசேகர் முக்கியமாக அடிபடுகிறார். கவனியுங்கள். ஆபீசில் அடி வாங்கினதையோ, அவர் சுதா பற்றி தவறாகப் பேசியதையோ இங்கே அவர் மறுக்கவில்லை. பார்கவி மாமி தனக்கு வந்த போனில் தனசேகர் பேசியதாகவும், தனசேகரிடம் சுதா சிரித்துப் பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அப்படி தான் போன் எதுவும் செய்யவில்லை என்று தனசேகர் சொல்கிறார். தனசேகர் சொல்வதெல்லாம் பொய் என்று பார்த்தால், சுதாவை பழி வாங்குவதற்கான சரியான மோடிவ் "இவருக்கு இருக்கும் பட்சத்தில், இவரை போலீசார் நேர்மையாக விசாரித்தார்களா? நேர்மையாக இவர் வீட்டை சோதனை போட்டு ஏதாவது தடயம் தேடினார்களா?"

"யுவர் ஆனர். இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன் தனது சாட்சியத்தில் தனசேகரை விசாரித்ததையும், அவர் ஏர்போர்ட்டில் இருந்ததற்கு சாட்சி இருந்ததையும், தெளிவாகக் குறிப்பிட்டார். மோடிவ் இருப்பதாலேயே ஒருவரைக் குற்றவாளியாக்கிக் பார்க்க முடியுமா? நண்பர் வழக்கை தயவு செய்து திசை திருப்ப வேண்டாம். சுதந்திரா கொலை செய்தாரா, இல்லையா என்பது தான் இப்பொழுது வழக்கு!" என்றார் ஜெகன்.

"இல்லை, சுதந்திரா கொலை செய்யவில்லை. தனசேகர் பொய் சாட்சி சொல்கிறார் என்பது தான் என் கருத்து. தட்ஸ் ஆல் வித் ஹிம் யுவர் ஆனர்" என்று அமர்ந்து கொண்டார் பட்டாபி.

உணவு இடைவேளை அறிவிக்கப்பட்டது.

கோர்ட்டுக்கு வெளியே ஜெகன், இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன், மாலினி மூவரும் கூடி நின்றார்கள்.

"என்ன சார் வழக்கு எப்படிப் போகுது?" என்றாள் மாலினி.

"எதுவும் சொல்ல முடியலை. ஜட்ஜ் ரெண்டு



பக்கமும் பாயிண்ட்ஸ் குறிச்சுக்கறார். அடுத்தது உன்னைத்தாம்மா விசாரிக்கப் போறோம். தைரியமா சொல்லு. கண்ணால பார்த்த நேரடி சாட்சி நீ. உன்னைத்தான் நான் பெரிசா நினைச்சிட்டிருக்கேன்" என்றார் ஜெகன்.

"ஐ விட்னெஸ் வெச்சுக்கிட்டும் கேஸ் ஜெயிக்குமான்னு கவலைப்படறீங்களே?" என்றார் இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன்.

"நம்ம சைடுல ஒரு பெரிய வீக்னெஸ் இருக்குது ஜெயச்சந்திரன் அதனால கவலையா இருக்கு"

"சுதந்திரா தன் மனைவியை சந்தேகப்பட்டு, அந்த சந்தேகம் மனசுல வளர்ந்தால கொலை செஞ்சார்ன்னு மோடிவ் சொல்றோம் நாம். ஜட்ஜ் அதில நம்பிக்கைப்பட்ட மாதிரி தெரியலை. மத்ததை ஒத்துக்கிட்டாலும் மோடிவ் சரியில்லைன்னு ஃபீல் பண்றார்னு நல்லாப் புரியுது. அவருக்குப் புரியறதென்ன, நமக்கே அதில் சந்தேகம் உண்டு. ஏன் கொலை செஞ்சான்? காரணம்? காரணம் எவ்வளவு பெரிய விஷயம்? இந்தக் கொலைக்குப் பின்னணில வேற ஏதோ மோடிவ் இருக்கணும். அதை நீங்க கண்டுபிடிக்கத் தவறிட்டீங்க. அதனாலதான் எனக்கு தவிப்பா இருக்கு" என்றார் ஜெகன்.

"கொலைகாரன் காரணம் உறுதியா இல்லைன்னா, கண்ணால பார்த்த சாட்சி சொல்றதையேக் கூட நம்ப மாட்டாங்களா சார்?" என்றாள் மாலினி.

"அது எதிர்கட்சி வக்கீல் எப்படி வாதாடறார்ங்கிறதைப் பொறுத்து, நீயும் பொய் சாட்சி சொல்றேன்னு லாஜிக்கா வாதம் செஞ்சா, ஜட்ஜ் கூட யோசிப்பார்."

"நானா? நான் ஏன் பொய்சாட்சி சொல்லணும்?" துடித்துப் போய் கேட்டாள் மாலினி.

"பதறாதேம்மா"

"எப்படி சார்? என் கண்ணு முன்னால கொலை நடந்திருக்கு. நீங்க என்னடான்னா சுதந்திராவுக்கு தண்டனை கிடைக்குமா, கிடைக்காதான்னு

சந்தேகமாப் பேசறீங்க" என்றாள் ஆவேசமாக.

"என்னம்மா பண்றது? நேர்ல பார்த்தும் கேஸ் வீக்கா இருக்கே? மோடிவ் சரியில்லையே. எதிர்கட்சி வக்கீல் பொய் சொல்றானே சுசாமா"

"அப்போ நாமும் பொய் சொல்ல வேண்டியது தான்"

"உணர்ச்சிவசப் படாதேம்மா, பொருத்தமா சொல்லி பொய்யை உண்மையாக்கற இடம் தான் கோர்ட். ஒரு கத்தியால கொன்னுருந்தாலாவது ,கைரேகை விஷயத்தில மாட்டுவான். தலையணையில அழுத்தி கொன்னுட்டான்"

"சார், என்னை வளர்த்து, படிக்க வெச்சி, தாய்க்குத் தாயா இருந்து கவனிச்சது என் அக்கா சார். அவ துடிச்சி துடிச்சி செத்ததை என் கண்ணால நான் பாத்திருக்கேன். அப்படியிருக்க ஏதேதோ திறமையான வாதங்களால அந்த பாவி தண்டனையிலேர்ந்து தப்பக் கூடாது சார். தப்பினா அது நீதிக்கே அவமானம்" என்றாள் மாலினி.

"வாம்மா, நேரமாயிடுச்சு" என்றார் ஜெகன் நடந்தார்கள்.

"உங்க பேரு" என்றார் ஜெகன்.

"மாலினி" என்றாள் சாட்சிக் கூண்டுக்குள் நின்ற மாலினி.

"என்ன பண்றீங்க?"

"எத்திராஜ் காலேஜ்ல படிச்சிட்டிருக்கேன்"

"எங்கே தங்கியிருக்கீங்க?"

"காலேஜ் ஹாஸ்டல்ல"

"உங்கக்கா சுதா கொலை செய்யப்பட்ட தினம் என்ன நடந்தது?"

"இரண்டு நாள் லீவு இருந்ததால் ஹாஸ்டல்லேர்ந்து அக்கா வீட்டுக்கு புறப்பட்டு வந்தேன்."

"எதில வந்தீங்க?"

"பஸ்ல வந்து இறங்கி வீட்டுக்கு நடந்து வந்தேன்"

"அப்போ மணி என்ன இருக்கும்?"

"ராத்திரி ஒன்பரை மணி இருக்கும்"



"சரி. சொல்லுங்க"

"வீட்டுக் கதவை ரெண்டு தடவை தட்டினேன். பதிலில்லை. வாசல்ல கார் இல்லாததால் அக்காவோட புருஷன் இன்னும் ஆபீஸ்லேர்ந்து திரும்பலைன்னு புரிஞ்சது. அக்கா தன் ரூம்ல தூங்கிப் போயிருக்கலாம்னு நினைச்சு வீட்டோட சைடுப் பகுதில நடந்து அக்காவோட பெட்ரூம் ஜன்னலுக்கு வந்து எட்டிப் பார்த்தேன். ஷாக் ஆயிட்டேன்"

"உள்ளே என்ன பார்த்தீங்க?"

"அக்காவோட முகத்தில தலையணையை அழுத்தி சுதந்திரா அவளைத் துடிக்கத் துடிக்க கொலை செஞ்சான். அக்கா தலை தொங்கிடுச்சு. எனக்கு அதிர்ச்சில மூச்சே நின்னுடுச்சு. உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டமா ஓடிப்போய் தகவல் சொன்னேன்."

"தட்ஸ் ஆல் யுவர் ஆனர்" என்று அமர்ந்தார் ஜெகன்.

"யுமே கிராஸ் எக்ஸாமின் ஹர்" என்றார் நீதிபதி.

பட்டாபி எழுந்து அவளருகில் வந்தார்.

"மாலினி, நீங்க ஹாஸ்டல்லேர்ந்து வந்தீங்க. கதவைத் தட்டினீங்க. திறக்கலை. வீட்டுக்கு பின்பக்கம் வந்தீங்க. திறந்திருந்திச்சு. உள்ளேப் போய் பார்த்தா உங்கக்கா கொலை செய்யப்பட்டுக் கிடந்தா. உடனே நீங்க ஓடி ஸ்டேஷனுக்கு வந்தீங்க. அக்காவை சுதந்திரா கொலை செஞ்சதை கண்ணால பார்த்ததா பொய் புகார் கொடுத்தீங்கன்னு நான் சொல்றேன்"

"நோ! நான் கொலையைக் கண்ணால பார்த்தேன்"

"இல்லை. பார்க்கலை. வேணும்னே அவர் மேல பழி போடறீங்க"

"நான் ஏன் அவர் மேல பழி போடணும்?"

"இது கேள்வி. ஒரு தடவை உங்கக்கா வெளியூர் போயிருந்தப்போ சுதந்திரா நீங்க தனியா வீட்ல இருந்தப்போ உங்களைக் கட்டிப் பிடிச்சி கன்னத்தில முத்தம் கொடுத்தார். உண்டா இல்லையா?"

அவள் மட்டுமல்லை. ஜெகனும் திடுக்கிட்டார்.

''சொல்லுங்க. உண்மையை மறைக்காம சொல்லணும். உண்டா, இல்லையா?''

''ஆமாம். அன்னைக்கு திடீர்னு அவர் அப்படி தகாத முறையில நடந்துக்கிட்டார். நான் அவர் கன்னத்தில அறைஞ்சேன். திட்டினேன். மன்னிப்பு கேட்டார். அன்னைக்கே அதை மறந்துட்டேன்''

''இல்லை யுவர் ஆனர். இவர் அன்றைக்கே அதை மறக்க வில்லை. மனதில் பதித்துக் கொண்டார். தன்னிடம் தப்பாக நடந்து கொண்ட சுதந்திரா மேல் வன்மம் வைத்திருந்தார். தன் அக்கா கொலை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்ததும் அவரை இந்தக் கொலையில் மாட்டி வைத்துப் பழி தீர்த்துக் கொள்ளும் வகையில் போலீஸ் ஸ்டேஷனில் சென்று பொய் புகார் கொடுத்ததாக நான் சொல்கிறேன். இதை நண்பர் மறுக்க முடியுமா?''

இந்தத் தகவலே புதிய அதிர்ச்சியாய் இருந்ததால், என்ன செய்வதென்று புரியாமல் அமர்ந்திருந்தார் ஜெகன். பட்டாபி ஜெயிக்கப் போகிறார் என்பது திட்டவட்டமாகப் புரிந்தது.

சாட்சிக் கூண்டில் நின்ற மாலினிக்கும் அது தெளிவாகப் புரியவே. அவள் தீர்மானித்தாள். திறமையான வாதத்திற்கு முன்பாக உண்மையும் அடிபட்டு விடும். உண்மை ஜெயிக்க கொஞ்சம் பொய்யும் தேவைப்படுகிறது.

வக்கீல் என்ன சொன்னார்? பொருத்தமாக பொய்யைச் சொன்னால் உண்மை என்று ஏற்றுக் கொள்வது தான் கோர்ட் என்றாரல்லவா?

'சுதந்திரா தண்டனையிலிருந்து தப்பக்கூடாது. அதற்காக என்ன ஆனாலும் சரி. நான் பொய்சொல்லப் போகிறேன். பெரிய பொய்! மகத்தான பொய்!

''யுவர் ஆனர்'' என்றழைத்தாள் மாலினி.

''யெஸ்'' என்றார் நீதிபதி.

''என்னோட இந்த விஷயத்தைச் சொல்லாமலேயே நல்ல தீர்ப்பு கிடைக்கும்னு நினைச்சேன். இப்போ ஒரு பெரிய உண்மையை நான் சொல்லித்தான் ஆகணும். யுவர் ஆனர். சுதந்திரா என்னைக் கட்டிப் பிடிச்சதும்,



நான் அறைஞ்சதும் எப்படி உண்மையோ, அதே மாதிரி அன்னைக்கு ராத்திரி நடந்த ஒரு சம்பவமும் உண்மை. நான் அறைஞ்சதால ஆத்திரமான சுதந்திரா அதே ராத்திரி நல்லா குடிச்சிட்டு வந்து என் ரூமுக்குள்ளே வந்து என்னை பலவந்தப்படுத்தினார். நான் எவ்வளவோ முயற்சி செஞ்சும் என் கற்பை காப்பாத்திக்க முடியலை. நான் அழுதேன். அவருக்கு போதை தெளிஞ்சதும் என்னை சமாதானப்படுத்தினார். என் மேல ரொம்ப நாளா ஆசைன்னார். சுதாவைக் கேட்டு என்னை இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னார். அக்கா ஒத்துக்க மாட்டான்னு சொன்னேன். ஒத்துக்கலைன்னா அவளை சாமர்த்தியமாக கொலை செஞ்சிடறேன்னு சொன்னார். நான் பயந்தேன். அப்படி செய்யாதீங்கன்னேன். ஆனாலும் என்னை கல்யாணம் செய்துக்கறதுக்காக, சாமர்த்தியமா அவர் என் அக்காவை கொலை செஞ்சிட்டார். இதான் உண்மை. இதான் கொலைக்கான உண்மையான காரணம். என்னோட மானம் சந்தி சிரிச்சாலும், ஒரு குற்றவாளி தப்பக் கூடாதுன்னுதான் கற்பிழந்த கேவலமான செய்தியை இப்படி பகிரங்கமாகச் சொல்றேன் யுவர் ஆனர்'' என்ற மாலினி விசும்பி விசும்பி அழத் துவங்கினாள்.

ஜட்ஜ் சரசரவென்று எழுதினார். பட்டாபி அசந்து போய் நின்றார். ஜெகன் இது உண்மையா, பொய்யா என்றுப் புரியாமல் ஆனால், சுதந்திராவுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கப் போகிறது என்கிற நம்பிக்கையுடன் நிமிர்ந்து பெருமிதத்துடன் மாலினியைப் பார்த்தார்.

- - - - - - - - - - - -

'வெற்றி பெற வேண்டுமென்று போராடாதே. தோல்வி அடையக் கூடாது' என்று நினைத்து போராடு. உலகம் உன் கையில்...!

— மாவீரன் அலெக்சாண்டர்.

## 16



மறுநாள் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

"ஒரு பெண் தன் கற்பை இழந்ததை பகிரங்கமாகச் சொல்வதென்றால், அந்த சாட்சியை சந்தேகப்பட இடமில்லை. குற்றத்தை கண்ணால் பார்த்த அவள் சாட்சி உண்மையென ஏற்கப்பட்டு, சுதந்திரா குற்றவாளி என தீர்ப்பளிக்கிறேன். அவருக்கு இ.பி.கோ.... "என்றார் நீதிபதி.

மாலினி தன்னை எல்லோரும் கை காட்டிப் பேசுவதைப் பற்றிக் கவலையேப்படாமல் நிமிர்ந்து வெளியே நடந்தாள்.

முற்றும்.

முதுகெலும்பில் மொத்தம் 34 எலும்புகள் உள்ளன. கழுத்துக்கு ஏழு, முதுகுக்கு பனிரெண்டு, இடுப்புக்கு ஐந்து, கடைசியாக வால்பகுதியில் ஐந்தாக மிகச் சிறு எலும்புகளும் உள்ளன. இக்கட்டை எலும்புகளுக்கு இடையே குருத்தெலும்புத் தகடுகள் முதுகுக்குச் சிறிதளவு அசைவு கொடுக்கும். விசைச் சக்தியையும் தரும். இந்த அசைவைக் கட்டுப்படுத்தி வைக்கவும் முதுகெலும்புக் கட்டுமானத்திற்கு வலிமை சேர்க்கவும் தசை நார்களும், சவ்வு நரம்புகளும் பொடத்திலிருந்து இடுப்புவரைப் பின்னிக் கிடந்து எலும்புகளையொட்டி இருக்கின்றன.

* நல்ல நட்பை இழப்பதை விட கொஞ்சம் பணத்தை இழப்பது மேல்

— மகாத்மா காந்தியடிகள்.